# ''புதிய அரசியல் அமைப்புக்கு தமிழ்ப் பிரதிநிதிகளின் உடன்பாடு வேண்டும்''

## தனிநாயக அடிகளார் அமைச்சருக்கு மகஜர்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

நவநாகரீக நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
ஹரன் ஜுவல்லர்ஸ்
R. G. பில்டிங்,
50, கன்னதிட்டி யாழ்ப்பாணம்
போன்: 444 தந்தி: 'இரத்தினம்ஸ்'
உரிமையாளர்: க. கிருபாகரன்
இரத்தினம் ஆபரண மாளிகை
உரிமையாளர் (காலஞ்சென்ற)
திரு K. V. கனகரத்தினம் J. P.
அவர்களின் மருமகன்

ஈழநாடு
THE EELANADU
National Tamil Daily
தபால் பெட்டி எண்: 49
போன்: 389
மலர் 12
இதழ் 247
தேசிய தினசரி
யாழ்ப்பாணம் புரட்டாதி 30 ஷஃபான் 14 வெள்ளிக்கிழமை (16-10-70)

எமது தீபாவளி
மலிவு விற்பனை
15 முதல் 28 வரை
தீபாவளி பண்டிகையை
சிறப்புடன் கொண்டாட
தரமான ஜவுளிகளைத்
தெரிவு செய்ய
ராஜ்கோபால்ஸ்
[பிரபல ஜவுளி மாளிகை]
36/1, பெரியகடை, யாழ்ப்பாணம்.

கொழும்பு வியாழன்பு. ஒருபகுதி மக்களின் அடிப்படை உரிமைகளைப்பற்றி குறித்த மக்களின் அல்லது அம் மக்களின் பிரதிநிதிகளின் உடன்பாடு இன்றிமுடிவெடுத்து சட்டமாக்குவது தவறிலும் தவருகும்'

இவ்வாறு வண. தனிநாயக அடிகளார் அரசியல் திட்ட அமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர் டி. சில்வாவுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்,

இலங்கையில் திருத்தியமைக்கப்படவிருக்கும் அரசியல் அமைப்பு பற்றி வண தனிநாயக அடிகளார் தமதறிக்கையில் கூறியுள்ளதாவது:

அடிப்படை உரிமைகளை வலியுறுத்தும் சட்டங்கள் எல்லோருடைய உடன்பாட்டையும் பெறுதல் வேண்டும், இத்துறையில் உட்பிரிவுப் பெரும்பான்மை எனும் திட்டத்தைக்கடைப்பிடிக்க வேண்டும் வரலாற்றுக் காலத்தில் சிங்கள அரசின் கீழ் இருந்த மக்கள் இணைந்து இன்று ஒரு நாட்டின் அரசியல் திட்டத்தை வகுப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். தமிழ் அரசின் மொழியாகவும் ஆட்சியின் மொழியாகவும் இடம்பெற வேண்டும்- தமிழ் இனத்தின் கல்வியும் ஆட்சியும் எல்லா நிலைகளிலும் தமிழிலேயே நடைபெற வேண்டும், இந்த நாட்டுக்கு ஸ்ரீலங்கா என்று பெயரிடுவதினுல் நாட்டின் எல்லா மக்களும் இந்நாட்டின் குடிகள் எனக்கொள்ள இடமுண்டு, ஒரு மொழி மாவட்டம், இரு மொழி மாவட்டம் எனப் பிரித்து சிலவற்றிற்குத் தமிழ் மட்டும் எனவும் சிலவற்றிற்கு சிங்களமும் தமிழும் எனவும் ஆற்றுப்படுத்தலாம்'

தமிழ்க் கல்விக்கும் தமிழ் நடவடிக்கைகளுக்கும் தனி ஒரு அமைச்சு இருக்கவேண்டும் பெல்ஜியம், கனடா சைப்பிரஸ் சுவிற்சர்லாந்து செக்கோஸ்லவாக்கியா சிங்கப்பூர், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் மொழி உரிமைகளுக்கும் பண்பாட்டு உரிமைகளுக்கும் அரசியல் திட்டத்தில் இடம்கொடுத்துள்ளன,

மேற்கூறிய நாடுகளில் சில இலங்கையிலும் சிறியவை, மக்கள் தொகையும் குறைந்ததாகவே இருக்கும் மொழி உரிமைகளை தமது அரசியல் திட்டத்தில் காப்பாற்றியுள்ளார்கள், இவ்வாறு செய்வதில் தேசிய ஒற்றுமையும் ஐக்கியமும் பலப்படும்,

தமிழ் மொழியை அப்படிச்செய்யாது புறக்கணித்தால் நாட்டின் எதிர்காலம் இருண்டதாகவே இருக்கும். 1956ம் ஆண்டில் பண்டாரநாயக்காவைச் சந்தித்து கொடுத்த மகஜரையும்தனியாக அடிகளார் எழுதிய 'ஈழத்துமொழியும் விடுதலையும்' என்னும் நூலையும் இம் மகஜருடன் இணைத்து அனுப்பியுள்ளார்.

# "பள்ளிவாசலுக்கு அழகக்கோன் வந்ததும் பரபரப்பு ஏற்பட்டது"

## மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கில் சாட்சியம்

(நமது நிருபர் கா. யோகநாதன்)

யாழ்ப்பாணம், வெள்ளி மீரான்பள்ளிவாசலில் இவ்வருடம் மே மாதம் 15ம் திகதி நடந்த தொழுகையின்போது கதீஸ் பிரசங்கம் நடந்த சமயம் அழகக்கோன் பள்ளிவாசலுக்கு வந்தார். தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டது சிலர்எழுந்து நின்ருர்கள். கதீஸ் பிரசங்கம்நிறுத்தப்பட்டது. அழகக்கோன் கைகளை உயர்த்திக் கும்பிட்டு 'பொருளை இழந்தேன் பணத்தை இழந்தேன். பார்வையை இழந்தேன். இந்த முறையும் வாக்குப் போடுங்கள்' என்ருர். பள்ளிவாசல் [illegible]

[illegible] சேபனை வழக்கில் தாராகுண்டைச் சேர்ந்த வருமான ஓவசியர் எம். ஏ. சுல்தான் சாட்சியமளிக்கும்போது மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கு யாழ்ப்பாணத்தில் நீதியரசர் வின்சன்ற் தாமோதரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

இவ்வழக்கில் மன்னார் ஆட்சிமன்ற உறுப்பினரான திரு வி ஏ அழகக்கோன் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து மற்ருெரு அபேட்சகரும் யு என் பியைச் சேர்ந்தவருமான மன்னார் பட்டினசபைத்தலைவர் [illegible]

[illegible] ஏச் எம் சகீது ஆகியோர் உதவியுடனும் புறக்டர் ஹம்சா சகீதீன் அனுசரணையுடன் ஆஜராஞர்.

எதிர் மனுதார் சார்பில் எம் திருச்செல்வம் கியூ ஸி, அட்வக்கேட ஏச் டி தம்பையா, அட்வக்கேட் வே சிவானந்தன் ஆகியோரின் உதவியுடனும் புரக்டர் ஆர் பாலசுப்பிரமணியத்தின் அனுசரணையுடனும் ஆஜராஞர்.

முடிக்குரிய தரப்பில் அட்வகேட் ஈ பி டி சில்வா ஆஜராஞர்.

விசாரணையைப் பார்க்க ஏராளமானேர் வந்திருந்தனர்.

சுல்தான் தமது சாட்சியத்தில் தொடர்ந்து கூறியதாவது:

'அழகக்கோன் போனபிற்பாடு பள்ளியில் கதீஸ் பிரசங்கம் திரும்பவும் நடந்தது. கதீஸ் முடிந்த பின்னர்

(4-ம்பக்கம் பார்க்க)

## தேர்தல் நீதிமன்றத்தில் தமிழிலும் பிரகடனம்

யாழ்ப்பாணம், வெள்ளி இன்றுமுதல் தடவையாக தேர்தல நீதிமன்றம் யாழ்ப்பாணத்தில் கூடி மன்னார் தேர்தல் ஆட்சேப மனுவை [illegible] பின் தமிழிலும் கூறினுர்.

வடபகுதி அசைஸ் விசாரணையின் போதும் சிங்களத்திலும் தமிழிலும் பிரகடனம் செய்யப்பட்டது குறிப் [illegible]

## மகாதேவா தாம்போதி

### பதில் மந்திரி நடவடிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி கேரதீவு-சப்குப்பிட்டிக் கடலை மூடி 'மகாதேவா பாலத்தை' அமைத்துப் பிரதான வீதியாக்க வேண்டும் என்று கிளிநொச்சித் தொகுதி எம். பி திரு. வீ. ஆனந்தசங்கரி அண்மையில் வடபகுதிக்கு விஜயம்செய்த பதில் நிதியமைச்சரிடம் மிக வற்புறுத்தியதைத் தொடர்ந்து பதில் அமைச்சர்நெடுஞ்சாலைவீதி அமைச்சுடனும் மற்றும் பொறுப்பு அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அநேக விவசாய மக்கள் பயனடையக்கூடியதும்நாளடைவில் அதிக வருமானம் தரக்கூடியதுமான இந்த மகாதேவா தாம்போதி வேலைகள் முன்னைய அரசினுல் பல தடவைகள் தொடங்கப்பட்டும் பின் போடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வடமாகாணத்துக்கு இது கேந்திரமான பிரதான நெடுஞ்சாலையென்று பல பொது ஸ்தாபனங்களும் பதில் அமைச்சருக்குச் சுட்டிக்காட்டியுள்ளன.

(குவிம)

## 'பாடசாலை மண்டபத்தில் பாம்புப்புற்று'

## சீனு 2 கோடி ரூபாய் உதவி

கோட்டை, வியா. "இலங்கையில் பெரிய துணிஆலையொன்றை நிறு [illegible] உடன்படிக்கையின் பயனுக மேற்படி ஒப்பந்தம் செய்யப்பட்டது. நாட்டின் அபிவிருத் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்நிறுத்தப்பட்டது. அழகக்கோன் கைகளை உயர்த்திக் கும்பிட்டு "பொருளை இழந்தேன் பணத்தை இழந்தேன். பார்வையை இழந்தேன். இந்த முறையும் வாக்குப் போடுங்கள்" என்றார். பள்ளி வாசல் விருந்தையில் நின்று அவர் கூறிவிட்டு கீழே இறங்கிச் சென்று ஒரு மரத்தின் கீழ் நின்று நோட்டீஸ் விநியோகம் செய்து கொண்டிருந்தார்.

மன்னார் தேர்தல் ஆட்சிமன்ற உறுப்பினரான திரு வி ஏ அழகக்கோன் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து மற்றொரு அபேட்சகரும் யு என் பியைச் சேர்ந்தவருமான மன்னார் பட்டினசபைத்தலைவர் திரு எம் எஸ் ஏ ரஹீம் மனு தாக்கல் செய்திருந்தார்.

இம்மனு விசாரணை நேற்று ஆரம்பமானது. மனுதாரார் சார்பில் அட்வகேட் இசடீஸ் முகமட் கியூ ஸி, அட்வகேட் குறசெற் தம்பையா, அட்வகேட் எஸ்

## தமிழிலும் பிரகடனம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்றுமுதல் தடவையாக தேர்தல நீதிமன்றம் யாழ்ப்பாணத்தில் கூடி. மன்னார் தேர்தல் ஆட்சேப மனுவை விசாரணைக்கு எடுத்த போது சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பிரகடனம் செய்யப்பட்டது.

விசாரணை ஆரம்பமான போது கட்டியக்காரர் 'அமைதி' என்று சிங்களத்திலும் தமிழிலும் கூறினார்.

விசாரணை முடிவின் போதும், ஒத்திவைப்பு பற்றிய தகவலை கட்டியக்காரர் முதலில் சிங்களத்திலும் பின் தமிழிலும் கூறினார்.

வடபகுதி அசைஸ் விசாரணையின் போதும் சிங்களத்திலும் தமிழிலும் பிரகடனம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கொண்டுள்ளதாகத் தெரிய டிக்காட்டியுள்ளன. வருகிறது. (கு வி ம)

## 'தொகுதிதோறும் பாடசாலை கமிட்டி வேண்டும்'

கோட்டை, வியாழன்

'எதிர்கால நலனுக்காக ஆசிரியர்களையே நம்பி ஏங்கியிருக்கும் மாணவ சமுதாயத்தின் சகல நலன்களையும் மனதில் வைத்து ஆசிரியர்கள் கண்ணுங் கருத்துமாகக் கற்பிப்பதனுல் பொதுமக்களின் நன்மதிப்பை மேலும் வளர்க்கலாம்.' என கொழும்பு சாஹிரா மகாவித்தியாலயத்தில் ஜனுப் எஸ். ஏச். எம். யாசீன் தலைமையில் நடைபெற்ற அகில இலங்கை அரசினர் இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் பதினெட்டாவது வருடாந்தக் கூட்டத்தில் உரையாற்றிய மேல்மாகாணத் தமிழாசிரியர் சங்கத்தலைவரும். அகில இலங்கைத் தமிழாசிரிய சங்க உபதலைவரும், அகில இலங்கை ஆசிரிய சங்கங்களின் ஆலோசனைச் சம்மேளனப் பொருளாளருமான திரு. வ. நடராசா கூறினுர். அவர் மேலும்பேசியதாவது:

'பதவி உயர்வுகளில் மாற்றங்களில், நிர்வாகத்தில் அநீதி நிகழாமல் ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளைக் கௌரவித்து அவர்களின் நேர்மைக்கு இடங்கொடுத்துச் செயலாற்ற கல்வி அமைச்சர் முன்வந்தமையைச் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் சகல சங்கங்களும் வரவேற்கின்றன. சாதி, சமயம், மொழி இவற்றுக்கு இடம் வைத்துவிகிதாசாரத்துக்கு அமைய ஆசிரியர்களை நியமித்து மார்க்கக் கல்வியைப் போதிக்கவும், உயர் கல்வியை ஓங்கச்செய்யவும் கல்வி அமைச்சர் எடுத்து வரும் முயற்சிகளும் பாராட்டத்தக்கவை.

கல்விக் காரியாலயங்களில் ஆசிரியர்கள் கால்கடுக்க நின்று கைகட்டிக் கருமம் பெற நின்ற ஓர் அவலநிலையைப் போக்கிவைத்தமைக்கும் ஆசிரியர்கள் கடமைப் பட்டுள்ளனர். ஆசிரியர்களின் சேவை சம்பளத்தை மாத்திரம் பொறுத்ததன்று ஆசிரியர்களைச் சமூகம் கௌரவிக்கவேண்டும் சமூகம் கௌரவிக்கக்கூடியதாக ஆசிரியர்களும் நடந்து கொள்ளவேண்டும்.

கொழும்பு மத்திய தொகுதியில் உள்ள சகல பாடசாலைகளின் சகல தேவைகளையும் அதிபர்கள் சுலபமாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக வீடமைப்பு அமைச்சர் திரு பீட்டர்கெனமன் பாடசாலைக் கமிட்டி ஒன்றை அமைத்துச் செயற்படுத்துவதுபோல ஒவ்வொருதொகுதியிலும் கமிட்டிகள் இயங்க ஆசிரிய சங்கங்கள் தூண்டுதல் செய்வது பலனைத்தருவதாகும்.

அகில இலங்கை அரசினர் இஸ்லாமிய ஆசிரிய சங்கம் எப்பொழுதும் எமது அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தோடு தோழமை பூண்டுவெற்றிக்கு உழைத்தமை மறக்கமுடியாதது. அச்சங்கத்தின் நலன்களுக்கும் நாம் எப்பொழுதும் போல் ஒத்துழைப்புக்கொடுப்போம்.'

## செனட்டர்கள் எச்சரிக்கை

நியுயோர்க். அக் 15

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கவிருக்கும் ஆயுத உதவிகள் மேற்காசிய சண்டையில் பாவிக்கப்படலாம் என்று ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த இரு செனட்டர்கள் அமெரிக்க அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

ஜோர்டானில் பாகிஸ்தான் தமது படையொன்றை நிறுத்தியிருப்பதை இந்தச் செனட்டர்கள் சுட்டிக்காட்டியிருப்பதுடன் இந்தப்படையினர் அமெரிக்கா வழங்கும் ஆயுதங்களைப் பாவிக்கமாட்டார்கள் என்று கூறுவதற்கில்லையென்றும், முன்னரும் நாம் ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## மனோகரன் ஆஸ்பததிரியில்

சென்னை, அக். 15

இந்திய ஆட்சிமன்ற உறுப்பினரும் திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர்களில் ஒருவருமான திரு. கே. மனோகரன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திரு. மனோகரன் நெஞ்சுவலியால் கஷ்டமுறுகிறார். அவர் ஒருவார காலத்துக்குமேல் ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டுமென்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்

## 'பாடசாலை மண்டபத்தில் பாம்புப்புற்று'

ஊரதீவு, வியாழன்

"புங்குடுதீவு வல்லன் சண்முகநாத வித்தியாசாலையில் ஆசிரியர் பற்றுக்குறையாக இருப்பதால் இப்பகுதிச் சிறார்களின் கல்விநிலை வெகுவாகப்பாதிக்கப்படுகிறது. பாம்புப்புற்றுகள் இருக்கும் மண்டபத்திலேதான் இளஞ்சிறார்கள் கல்வி பயிலுகிறார்கள் மாணவர்களின் பாவனைக்கு ஒரு மலசலகூடமும் இப்பாடசாலையில் இல்லாதிருக்கிறது. ஆசிரியர்களில் சிலர் லீவு பெற்றுச் செல்லும் நாட்களில் பிள்ளைகளை வழிநடத்த எஞ்சியுள்ள ஒருசில ஆசிரியர்கள் படுங் கஷ்டம் சொல்லுந்தரமன்று எனவே இக்கல்விக் கூடத்தின் வளர்ச்சியில் அக்கறை காட்டிப் போதிய ஆசிரியர்கள் கடமையாற்ற வழிவகுப்பதோடு புதிய கட்டிடம் ஒன்றும் நிறுவி மலசல கூட வசதியும் செய்துதருக"

இவ்வாறு வல்லன்முன்னேற்றக்கழகத்தலைவர் திரு. சி. கோபாலபிள்ளை தீவுப்பகுதி எம். பி. திரு. கா' பொ. இரத்தினத்துக்கும் கல்வி அமைச்சருக்கும் அனுப்பி வைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

## உதவி

கோட்டை, வியா.

"இலங்கையில் பெரிய துணிஆலை யொன்றை நிறுவுவதற்கு மக்கள் சீனக் குடியரசு இரண்டுகோடியே இருபது லட்சம் ரூபாவை வழங்கவுள்ளது.

இதற்கான ஒப்பந்தத்தை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் திட்ட அமைச்சின் செயலாளர் பேராசிரியர் குணசேகரா இலங்கையிலுள்ள சீனத்தூதருடன் செய்துகொண்டார்.

13 ஆண்டுகளுக்குமுன் இரு நாடுகளும் செய்துகொண்ட உடன்படிக்கையின் பயனுக மேற்படி ஒப்பந்தம் செய்யப்பட்டது நாட்டின் அபிவிருத்தித்திட்டங்களுக்கு உதவி செய்வதற்குஒப்புக்கொண்டு இலங்கை அரசாங்கத்துடன் முன்னர் மக்கள் சீனக் குடியரசு இலங்கை அரசுடன் உடன்படிக்கை செய்திருந்தது. இந்த உடன்படிக்கையின் பிரகாரம் சீனு இலங்கையின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்குக் காலத்திற்குக் காலம் உதவி செய்து வருகின்றது.

## 5000 மக்கள் வீடுகளை இழந்தனர்

### மலைநாட்டில் தொடர்ந்து மழை

கொழும்பு, வியாழன்

கொழும்பு அவிசாவளை இரத்தினபுரி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் கடும்மழை பெய்து வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் தாழ்ந்த பகுதிகளிலுள்ள பிரதான பாதைகள் அனைத்துமே நீரில் மூழ்கிப்போய் உள்ளன,

சுமார் 5000 பேர்வீடுகளை இழந்து தவிக்கின்றனர்; தற்போது பெய்துகொண்டிருக்கும் மழை நீடிக்குமானுல் பெருவெள்ளம் ஏற்பட்டு நஷ்டம் ஏற்படலாமென அதிகாரிகள் அஞ்சுகிறார்கள். களனிகங்கையும் சித்தவாக்கா கங்கையும் ஏற்கனவே பெருக்கெடுத்துள்ளன.

அடுத்த 48 மணித்தியாலங்களிலும் மழை தொடர்ந்து இப்பகுதியில் பெய்யலாமென கொழும்பு காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. (சி, பி, ஏ)

## தனி இன பிரகடனக் கோரிக்கைக்கு கண்டனம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சிறுபான்மைத் தமிழர் மகாசபை அரசியல் நிர்ணய சபைக்கு அனுப்பிவைத்துள்ளசிறுபான்மையினரைத் தனிச்சமூகமாக பிரப்கடனப்படுத்தவேண்டுமென்ற கோரிக்கையை ஆரியகுளம் முற்போக்கு வாலிபர் கழகம் கண்டித்துள்ளது.

ஆண்டாண்டு காலமாக ஒருசாராருக்குச் சிறுபான்மையினர் என்னும்முத்திரை பொறித்து, அதன் மூலம் நிரந்தரமாக அவர்களுக்குத் தாமே தலைமை தாங்கும் நோக்குடன் மகசேபை இவ்வித கோரிக்கையை விடுத்துள்ளதாகக் கழகப்பொதுக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. திரு ம. செல்வராசா தலைமையில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டதாவது:

"சிறுபான்மைத்தமிழர் மகாசபை அரசியல் நிர்ணயசபைக்கு அனுப்பிவைத்துள்ள ஆலோசனை மகஜரில் குறிப்பிட்டுள்ள சிறுபான்மைத் தமிழ் மக்களை தனியினமாக அல்லது தனிச்சமூகமாகப் பிரகடனம் செய்யவேண்டும் என்ற கோரிக்கையை எமது கழகம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது. ஏனெனில் எமது மக்களுக்கு ஆண்டாண்டு காலமாக சிறுபான்மையினர் என்ற முத்திரை பொறித்து அதன் மூலம் சிறுபான்மை மக்களுக்குரிய தலைமைப் பதவிகளை தாங்களே என்றும் வைத்துக்கொள்வதே சிறுபான்மைத்தமிழர் மகாசபையின் நோக்கமாகும்"

இவ்விஷயத்தை நன்கு விளக்கித் துண்டுப்பிரசுரம் வெளியிடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மறைந்த பிரதமர் திரு. பண்டாரநாயகாவின் சிரார்த்த தினத்தையிட்டு அன்னருக்கு மரியாதை செலுத்துமுகமாக இரு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டதுடன் மறைந்த ஐக்கிய அரபுக்குடியரசு ஜனதிபதி நாஸருக்கும் இரு நிமிடமௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## மனைவி வீட்டில் தாக்கப்பட்டாராம்

### அறிவற்ற நிலையில் வாலிபர் ஆஸ்பத்திரியில்

ஊரதீவு, வியாழன்

பிரிந்திருந்த தமது மனைவியின் வீட்டில் தாக்கப்பட்டாராம் வாலிபர் ஒருவர். அறிவற்ற நிலையில் இவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் அங்கு நடைபெற்ற வாக்குவாதத்தை தொடர்ந்து தாக்குதலுக்குள்ளான ரகுபதி என்ற வாலிபர் முதலில் தமது மனைவியின் தாயாருக்கு உலக்கையால் தாக்கியதைத் தொடர்ந்து அவரது கால் முறிந்ததாயும் இதனைத்தொடர்ந்து பிரஸ்தாப வாலிபர் தாக்கப்பட்டதாயும் கூறப்படுகிறது.

வீடுவருமாறு மனைவி எழுதிய கடிதத்தைத் தொடர்ந்து பிரிந்துவாழ்ந்த தம்மனைவியின் வீடு சென்ற ரகுபதி என்ற வாலிபரை அவரது மனைவியின் தாயார் ஏசியதாயும் இதனுல் கோபமடைந்த பிரஸ்தாப நபர் உலக்கையால் மாமியார் சிவபாக்கியத்தைத் தாக்கியதாகவும் மாமியாரை அவர் தாக்கிக்கொண்டிருப்பதை அறிந்த உறவினர்கள் ஓடோடி வந்து அவரைப் பொல்லாலும் கத்தியாலும் தாக்கியதாயும் இத்தாக்குதலில் இரண்டு பெண்களும் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் இதுபற்றிக் கூறப்படுகிறது. பொலிஸார் புலன்விசாரணை செய்து வருகின்றனர். சந்தேகநபர்கள் எவரும் இதுவரைகைது செய்யப்படவில்லை.

ரகுபதிக்கு மண்டை முழுவதும் காயங்கள் ஏற்பட்டுள்ளது. இன்னும் அவருக்குச்சுயநினைவு வரவில்லை தாக்குதலில் கால் முறிந்த மாமியார் சிவபாக்கியம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## 20,000 ஓவசியர்கள் நிலை என்ன?

கொழும்பு வியா

அடுத்த வருடம் முதல் பல்வேறு இலாகாக்களிலுமுள்ள திட்டங்களில் வேலை செய்யும் 20,000 ஓவசியர் பதவிகள் ஒழிக்கபடவிருக்கின்றன இப்பதவிகளிலிருந்து விலக்கப்படுவோருக்கு என்னவேலை கொடுப்பதென இதுவரை முடிவு செய்யப்படவில்லை

இதுவிடயமாக நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலை அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவை ஓவசியர்கள் பேட்டி காணவிருக்கின்றனர்

## பிக்கு உடையை மாற்றினார்

கொழும்பு வியா

கடந்த தேர்லின்போது ஐ தேசியக்கட்சிக்குகடும்பிரசாரம் செய்து வந்த பௌத்தபிக்கு ஒருவர் தனது உடைகளைக்களைந்து சாதாரண உடைகளை அணிந்து கொண்டார்:

வண யட்டிதேரியவஜ்ஜிரபுத்திஎன்று அழைக்கப்படும் இப்பௌத்தபிக்கு சமீபத்தில் இந்தியாவுக்கு பௌத்த உடைஅணிந்து பௌத்தபிக்குவாகச் சென்று நற்றுமுன் திரும்பி வருகையில் மேல் சட்டையும் கால்சட்டையும் அணிந்து காணப்பட்டார் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பத்திரிகை நிருபர்கள் அவரைச் சந்தித்தபோது தம்மை திருவாளர் வஜ்ஜிர பல்பிட்டஎனஅழைக்கும்படி மாஜி பிக்கு கேட்டுக்கொண்டார் (சி பி ஏ)

......

## சேர் ஜோன் திரும்பினார்

கொழும்பு வியாழன்

முன்னாள் பிரதமமந்திரி சேர் ஜோன் கொத்தலாவலை நேற்று கொழும்பு திரும்பியுள்ளார்

இங்கிலாந்திலுள்ள தனது கென்ற் பண்ணையில் நீண்ட நாட்கள் தங்கியிருந்துவிட்டு இவர் தாயகம் திரும்பியுள்ளார் (சி பி ஏ)

## 2வது கொத்து அரிசியை 70 வீதமானோர் வாங்கினர்

கொழும்பு, வியாழன்

பங்கீட்டு அரிசித் திட்டத்தின் கீழ் அரசாங்கம் கொடுத்த இரண்டு கொத்து அரிசியில் 75 சதம் கொடுத்து வாங்கும் இரண்டாவது கொத்து அரிசியை முதல் வாரத்தில் 70 சதவீதமான மக்கள் வாங்கியிருக்கிறார்களென உணவுக் கட்டுப்பாட்டு இலாகாவின் புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

இரண்டாவது கொத்து அரிசி வழங்குவதற்கென 200,000 அந்தர் அரிசி ஒதுக்கப்பட்டது. இதில் 144,073 அந்தர் அரிசி மட்டுமே முதற் கிழமை கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் 10,945 அந்தர் அரிசியும், மட்டக்களப்பில் 2625 அந்தர் அரிசியும், மன்னாரில் 943 அந்தர் அரிசியும் கொடுக்கப்பட்டிருப்பதாகப் புள்ளி விபரம் கூறுகிறது.

## மரண அறிவித்தல்

**V. A. தம்பிராசா**

இலங்கைப் போக்குவரத்துச் சபை கோண்டாவில் டிப்போவைச் சேர்ந்த சாரதி V. A. தம்பிராசா காலமாகிவிட்டார். அன்னரது ஈமக் கிரியைகள் புன்னாலைக்கட்டுவன் வடக்கிலிருக்கும் அவரது இல்லத்தில் 16ந் தேதி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் நடைபெறும்.

கந்தர்மடம் — சி. இராசநாயகம்

2515

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுநகரில் அமைச்சர் குமாரசூரியருக்கு சென்ற விடமெல்லாம் சிறப்பான வரவேற்பு!

## இரு எம். பி.க்களும் விருந்தளித்து கௌரவித்தனர்!!

மட்டக்களப்பில் தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியருக்குச் சென்றவிடமெல்லாம் மக்கள் உற்சாகமான வரவேற்பளித்து அமைச்சரைத் திணறவைத்துவிட்டார்கள். மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு அமைச்சர் மட்டுநகருக்கு வந்திருந்தார். தமிழ் அமைச்சரை வரவேற்பதில் மக்கள் காட்டிய ஆர்வமும் உணர்ச்சியும் திரு. குமாரசூரியரின் உள்ளத்தைப் பெரிதும் கொள்ளைகொண்டுவிட்டதென்று சந்தேகமில்லாமல் சொல்லலாம்.

கொழும்பிலிருந்து விமானத்தில் மட்டுநகர் வந்துசேர்ந்த அமைச்சருக்கு விமான நிலையத்தில் திரண்டிருந்த மக்கள் சிறப்பான வரவேற்பை அளித்தனர். விமானத்திலிருந்து இறங்கி தமது துணைவியார் திருமதி அன்னபூரணி அருகே வர கை அசைத்துக்கோஷமிட்டு உணர்ச்சி பொங்க திரண்டிருந்த மக்கள் கூட்டத்தைப் பார்த்துக்கைகூப்பி வணங்கி அமைச்சர் தமது அன்பைத் தெரிவித்துக்கொண்டார்.

### வித்தகருக்கு அஞ்சலி

முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளாருக்குச் சிரம்தாழ்த்தி அமைச்சர் அஞ்சலி செலுத்தியது முத்தமிழ் மீது தமக்குள்ள பற்றை சொல்லாமல் சொல்வது போன்றிருந்தது. கல்லடி-உப்போடையிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரமத்திற்கு மந்திரி சென்ற போதே அங்குள்ள முத்தமிழ் வித்தகருடைய சமாதிக்கு அஞ்சலி செலுத்தினார், மலர்மாலை சாத்தினர்.

குமாரசூரியர் தம்பதிகளை சுவாமி ஜீவனந்தஜி ஆச்சிரமத்துக்குள் அழைத்துச் சென்று பரமஹம்சரின் திருவுருவப்படத்துக்கு விசேட தீபாராதனை செய்து அமைச்சருக்கும் துணைவியாருக்கும் பிரசாதம் வழங்கினர்

### 'உங்கள் நாடு'

'உங்கள் நாடு இது. இந்நாட்டில் பிறந்தவர்கள் நாம் இப்பூமியைவிட வேறு எமக்குக் கிடையாது எமக்குத் தேவையானவற்றை உங்கள் அரசிடம் பெற்றுக்கொள்ளத் தவறக்கூடாது' என்று ஆரையம்பதி மக்கள் அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் அமைச்சர் குமாரசூரியர் உணர்ச்சிவசப்பட்டுக் கூறியபோது கரகோஷம் வானைப்பிளந்தது!

திருநாவுக்கரசு நாயனாரை அமைச்சர் இங்கு நினைவுபடுத்தினர். 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று திருநாவுக்கரசு நாயனர் பாடியதை அமைச்சர் எடுத்துச் சொன்னர். 'நாயனர் கூற்றைப் போல யாருக்கும் யாரும் அடிமையல்ல. பொருளாதாரத்தில்நாமார்க்கும் குடியல்லோம். ஆட்சி நடத்துவதிலும்நாமார்க்கும் குடியாக இருக்கக்கூடாது' என்றுஅமைச்சர் சொன்னர்

மக்களிடமிருந்து பெற்ற அதிகாரத்தை மக்களுக்கே மக்கள் அரசாங்கம் திருப்பிக்கொடுக்கப் போகிறது' என்று அமைச்சர் கூறினர்.

### எம். பிக்கள் அளித்த விருந்து

தமிழரசுக் கட்சியைச்சேர்ந்த மட்டக்களப்பு முதல் எம். பி. திரு செ இராசதுரையும், சுயேச்சை அங்கத்தவரான 2-வது எம். பி. திரு. ராஜன் செல்வநாயகமும் அமைச்சர் குமாரசூரியருக்கும் அவரது துணைவியாருக்கும் விருந்தளித்துக் கௌரவித்தமை அமைச்சரின் மட்டக்களப்பு விஜயத்தில்குறிப்பிடக்கூடிய அம்சங்களாகவிருந்தன.

மட்டக்களப்பிலுள்ள பிரபல ஹோட்டலான 'ஹோட்டல் ஓரியண்டிலில்' வைத்து குமாரசூரியருக்கும் அவர் மனைவிக்கும் எம். பி. இராசதுரை இராப்போசன விருந்தளித்தார். இந்த விருந்துபசாரத்தில் அமைச்சர், இராசதுரையை வெகுவாகப் புகழ்ந்தார். சொல்லின் செல்வரென்றும், இனிமையான பேச்சாளரென்றும், இலக்கியப்பற்றுள்ளவரென்றும் இராசதுரையைப் பாராட்டிவிட்டு, தமக்களித்தவிருந்துபசாரத்துக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. திரு ராஜன் செல்வநாயகம் தமது இல்லத்தில் பகல் போஜன விருந்துபசாரம் அளித்தார். இந்த விருந்துபசாரத்தில் கல்குடா எம் பி திரு கே டபிள்யு தேவநாயகம், பட்டிருப்பு எம் பி திரு எஸ் யு தம்பிராசா, மட்டுநகர் மேயர் திரு ஜே எல் திசவீரசிங்கம் உட்படப் பல பிரமுகர்கள் இந்த விருந்துபசாரத்தில் பங்குகொண்டனர்.

விருந்துபசாரத்தை தமக்கு அளித்த 2-வது எம் பி திரு ராஜனை முதலில் பாராட்டிய அமைச்சர், ராஜன் குடும்பம் மட்டக்களப்புக்கு ஆற்றியசேவையை மனம்திறந்து பாராட்டினர்.

'இந்த நாட்டில் இளைஞர்கள் ஐந்து சதத்துக்கும் 'பிளயின்டீ' குடிக்க பெரிதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவ்வளவு தூரத்துக்கு வேலையில்லாப்பிரச்னை தலைவிரித்துத்தாண்டவமாடுகிறது. இங்குள்ளவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும் பரவாயில்லை, இளைஞர்கள் பிரச்னைக்கு யாரென்ருலும் மதிப்பளிக்கவேண்டும். இன, மத, சாதி வேறுபாடுகள் யாவற்றையும் மறந்து நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைக்கவேண்டியது அவசியம்' இவ்வாறு அமைச்சர் ராஜன் அளித்த விருந்துபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

### தபால் ஊழியர் மத்தியில்

தபால் தந்தி மந்திரியல் ... மட்டக்களப்புப் பெரிய தபால் கந்தோருக்கும் அமைச்சர் விஜயம்செய்து ஊழியருடன் மனம் விட்டுப் பேசினர்

திரு. வி. சிவஞானம் தலைமையில் வரவேற்புபசாரங்கள் நடைபெற்றன.

''காலம் முழுவதும் சிற்றூழியராகவே இருக்காமல் பதவி முன்னேற்றம் பெற விரும்பினல் சிங்களத்தை கற்றுக்கொள்ள முடியுமோ அவ்வளவு நன்மை அடையக் கூடியதாயிருக்கும்'' என்று வரவேற்பின்போது குறிப்பிட்டார்.

புதிதாக தபால் தந்திப் பகுதிக்கு ஆட்கள் நியமிக்கப்படமாட்டார்களென்றும் இப்போதுள்ள தபால் தந்தி ஊழியர்களுக்கே புதிய பதவிகள் வழங்கப்படுமென்று ஊழியர்களுக்கு மகிழ்ச்சி தரும் தகவலை அமைச்சர் வெளியிட்டார்.

அமைச்சர் குமாரசூரியரின் மட்டக்களப்பு விஜயம் மக்கள் அரசாங்கத்தின்மீது கிழக்கிலங்கை மக்களுக்கு மேலும் நம்பிக்கையையும் நெருங்கிய இணைப்பையும் ஏற்படுத்துவதாக அமைந்ததென்று சொல்லலாம்.

— பாடும் மீன்'

---

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கடுகிய ரோஜா (குறுநாவல்) 2-ம் பதிப்பு விற்பனையாகின்றது புதுமைலோலன் எழுதியது, விலை சதம் 50. 60 சதம் தடாற்தலையனுப்பிப் பெறலாம். வியாபாரிகளுக்கு 25 வீதம் கழிவு தரப்படும். விற்பனை: அன்பு புத்தகசாலை, 27 டி, பெரியகடை, யாழ்ப்பாணம். 2338

மூன்ருந்தவணை மாணவர் பயிற்சி பெறவும், N.P T.A. பரீட்சையில் சித்தி பெறவும் ஏற்றவை வே. க. கந்தசாமி (புதுமைலோலன்) எழுதியவை. ஐந்தாந்தர விஞப்பத்திரங்கள்-கணிதம், தமிழ், இந்துசமயம், ஆங்கிலம், சூழல் ஆகிய எல்லாப் பாடங்களுக்கும் ஆக்கப்பட்டுள்ளன, விலை சதம் 60. கூடுதலாக எடுப்பவர்களுக்குக் கழிவுண்டு. எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும் 2339

அரியாலை - 52/3, ஆனந்தன்வடலி ரோட், 1-ம் ஒழுங்கை (புங்கன்குளம் ஸ்டேசன் சமீபம்) 3 1/2 பரப்பு காணி, பிரயோசனங்களுடன் விற்பனைக்கு - பரப்பு ரூபா 2500/- 416, நாவலர் ரோட், அரியாலை. 2340

### தவறிவிட்டது

இம்மாதம் 14-ந் திகதி (14-10-70) புதன்கிழமை காலை 10-30 மணியளவில் பருத்தித்துறையில் இருந்து புறப்பட்ட மானி-நவாலி பஸ்ஸில் உறுதிக்கட்டு ஒன்று தவறிவிட்டது. அத்துடன் இருந்த புதிய மணிப்பர்சை அனுப்பாதுவிட்டாலும், உறுதிக்கட்டுகளை தயவு செய்து கிழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றேன், கண்டு எடுத்தவர்களுக்கு ரூபா 25 அன்பளிப்பாகத் தரப்படும். முருகுப்பிள்ளை கந்தையா, உடுப்பிட்டி வடக்கு நாவலடி, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை P. o. 2341

## கேள்வி விளம்பரம்

31-10-1970-ம் திகதி வரை ''அரிப்புரோட்டு அரசநன்கொடை வேலைக்கான'' கேள்விகள் முசலி வடக்கு கிராமசபை தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும். உத்தியோகபூர்வமான கேள்விப்பத்திரத்தின் கிரயம் ரூபா 10·00 கேள்விப்பத்திரம் 30-10-70-ம் திகதி நண்பகல் 1-30 மணிவரை விநியோகிக்கப்படும். இதன் பிரதி மன்னர்ப்பகுதி உள்ளூராட்சி உதவிஆணையாளர் அவர்கட்கு அதேதேதியிலும் அதே நேரத்திலும் அனுப்பி வைக்கப்படவேண்டும். மேல்விபரங்கள் முசலி வடக்கு கிராமசபைக் கந்தோரிலும் மன்னர்ப் பகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கந்தோரிலும் அறிந்துகொள்ளலாம்.

மு. மீராசாகிபு
தலைவர்
முசலி வடக்குகிராமசபை,
அரிப்பு.
13-10-70 2513

உடுப்பிட்டி, வியா

55வயது ஒய்வுத் திட்டத்தின் கீழ் கரவெட்டி தபாற் கந்தோரில் பணிபுரிந்துவரும் மூன்று தபால் சேவகர்கள் அடுத்த வருடம் ஜனவரியிலிருந்து ஓய்வு பெறவிருக்கின்றனர்.

## மண்ணெண்ணை தட்டுப்பாடு

ஊரதிவு, வியா

ஊரதிவுப் பகுதியில் மண்ணெண்ணைத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனுல் இப்பகுதி மக்கள்மிகுந்த சிரமமும், கவலையும் அடைந்துள்ளனர்

### கல்வி

ஜி சீ. ஈ. (சாதாரணம்) தட்டெழுத்து. சுருக்கெழுத்துப் பாடங்களுக்கான வகுப்புக்களுக்கு விண்ணப்பங்கள் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. யூனைட்டெட் அக்கடமி, நெல்லியடி, கரவெட்டி 2323

## சுன்னுகம் பட்டணசபை கேள்வி அறிவித்தல்

1970-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25-ம்திகதி காலை 10-00 மணி வரை மைலணி வீதி திருத்த வேலைக்கான சீல் வைத்த கேள்விகள் என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விப் பத்திரங்களை 24-10-70-ம் திகதி மாலை 3-00 மணிக்கு முன்பதாக படிவப்பணமாக ரூபா 10/-ம் பிணைப்பணம் ரூபா 50/-ம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் பதிவுத் தபால்மூலம் அல்லது சுன்னுகம் பட்டினசபைக்காரியாலயத்திலுள்ள கேள்விப்பெட்டியில்போடல் வேண்டும், மற்றும் விபரங்களை பட்டினசபைக் காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொ. நாகலிங்கம்
தலைவர்,
பட்டணசபை, சுன்னுகம்.
பட்டணசபை அலுவலகம்,
சுன்னுகம்.
12-10-70. 2514

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 16—10—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 பண்ணுரிந் தமிழ், 7-45 திரைகானம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதங்கள்

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நிலையஒலிப்பதிவுகள்.

இரவு 6-15 பாமாலை, 6-30 ஆலய நிகழ்ச்சி — நேர்முக அஞ்சல், 7-00 திரைகானம், 7-15 புல்லாங்குழல், 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்தித் தொகுப்பு.

## சமூக நல்லுறவுக்கு வழி

உடுப்பிட்டி, வியாழன்

வாலிபர்களின் நல்வ திட் ...

## கேதீச்சரத்தில் லட்சார்ச்சனை

நல்லூர். வியாழன்

திருக்கேதீச்சரம் ஸ்ரீ கௌரி அம்பாளுக்கு 15 நாட்கள் கேதார கௌரி விரத விழாவை முன்னிட்டு இலட்சார்ச்சனை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இம்மாதம் 24-ம் திகதிவரை லட்சக்கணக்கான அர்ச்சனைகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆயுள்வேத ஆணையாளர் யாழ். விஜயம்

யாழ்ப்பணம், வெள்ளி

ஆயுர்வேத இலாகா ஆணையாளர் டாக்டர் விமல் நவகமுவ இம்மாதம் 10-ம் திகதி உத்தியோகபூர்வமான விஜயமொன்றை மேற்கொண்டு யழ்ப்பாணம் வந்துள்ளார்.

அவர் யாழ்ப்பாணம் ஆயுர்வேதக்கல்லூரி கைதடியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டம் பொக்கணையில் ஆயுர்வேத மூலிகைகள் உற்பத்திசெய்வதற்காக கொடுக்கப்படவிருக்கும் அரசாங்க நிலம் மற்றும் யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள இலவச ஆயுள்வேத வைத்தியசாலைகளையும் பார்வையிட்டார். நாளை இரவு கொழும்பு ஆயுர்வேதக்கல்லூரி பழைய மாணவர்களால் ஒழுங்கு செய்யப்படும் விருந்துபசாரத்திலும்கலந்துகொண்டுவிட்டு நாளை மறுநாள் கொழும்பு செல்கிருர்.

டாக்டர் விமல்நவகமுவவுடன் இலங்கை ஆயுள்வேதச்சங்கத்தலைவர் டாக்டர் சந்திரசேன; செயலாளர் டாக்டர் குமாரசிங்கா, வைத்திய இலாகா பதிவாளர் டாக்டர் எதிரிசிங்கா ஆகியோரும் இங்கு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## விரைவில் நெற்சபை நிறுவப்படும்

கோட்டை. வியாழன்

1971-ம் ஆண்டு 8 கோடி புசல் நெல்லை இலங்கை விவசாயிகள் உற்பத்தி செய்வார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது. இதனுல் நாட்டின் அரிசித் தேவையில் 80 வீதம் பூர்த்தியாகும்.

அடுத்தாண்டுமார்ச்மாதத்திலிருந்து அரசாங்கமே ஏகபோக நெல் கொள்வனவு ஸ்தாபனமாக விளங்கும் தனியார் நெல் கொள்வனவு செய்தலையும் அரிசி விற்றலையும் அரசாங்கம் தடைப்படுத்தும் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அரசாங்கம் அரிசி இறக்கு மதியையும் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கம் நெல்சபையொன்றை விரைவில் நிறுவவிருக்கிறது. இந்தநெல்சபை நிறுவப்பட்டதும் அரிசி ...

## உதை பந்தாட்டம்

# திருமலை வீரர்களை பற்றிக்ஸ் வென்றது

யாழ்ப்பாணம் வெள்ளி

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், திருக் ... இடைவேளையின் பின் சென். ஜோசப்ஸ் கோஷ்டியினரின் விளையாட்டு கவர் ...

அன்பு பாலர் பாடசாலை

330, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம்.

3—5 வயதுப் பாலர்கள், மொன்ரிசோறி முறையில் பயிலவும் பாலர் பயிற்சிபெற்ற ஆசிரியைமூலம் பாடசாலைக்குப் போகுமுன்பு ஆரம்ப அறிவு பெறவும் ஏற்ற பாடசாலை. மாதக்கட்டணம் ரூ. 7-50. இன்னும் சில பாலர்கள் மட்டுமே சேர இடமுண்டு.

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெய்சங்கர்— நிர்மலா
ஜி. வரலக்ஷ்மி — நாகேஷ்
நடித்த

கைத்தறி நெசவாளர்களுக்கு ஓர் அறிவித்தல்

உங்களிடம் உற்பத்தியாகும் எந்தவிதமான கைத்தறி ஜவுளிகளையும் பெறுமதியான விலைகளுக்கு எம்மிடம் விற்பனை செய்யலாம்.

S. R. S.
ஜவுளி மாளிகை
எஸ். ஆர். செல்லத்துரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் சில பாலர்கள் மட்டுமே சேர இடமுண்டு.

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர் — நிர்மலா
ஜி. வரலக்ஷ்மி — நாகேஷ்
நடித்த
# உயிரா மானமா

யாழ். வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினிகணேசன் — காஞ்சனா
நடித்த
# சாந்தி நிலையம்

7-வது வாரம்
வெலிங்டன் யாழ்நகர்
(2-30, 6-30, 9-30) போயாதினங்களில் 4 காட்சிகள்

இங்ஸ்லி (கொழும்பு)
தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.
உணர்ச்சி ஓவியம் . . .
★ ஏ.வி.எம்.ராஜன்
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா
காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி
நடித்த
ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்
# துலாபாரம்
(தமிழ்)
டைரக்ஷன்: வின்ஸன்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
வெகு விரைவில் வெலிங்டன் யாழ்ப்பாணம்
★ சிவாஜி ★ சௌகார் ஜானகி
சிவகுமார், வாணிஸ்ரீ, பாரதி
மற்றும் பலர் நடித்த
ஏ. வி. எம். புரடக்ஷன்ஸ்
# உயர்ந்த மனிதன்
[1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய பாராட்டைப் பெற்றது]

## சமூக நல்லுறவுக்கு வழி

உடுப்பிட்டி, வியாழன் வாலிபர்களின் நல்ல திட்டங்களுக்கு எனது முழு ஒத்துழைப்பையும் கொடுப்பேன். இளம் சமுதாயம் ஒற்றுமையாக இயங்கினால் சமுதாயத்தில் பரஸ்பர நல்லுறவும் ஐக்கியமுமேற்படும்'' என நெல்லியடிப் பட்டினசபைத் தலைவர் திரு எஸ். பி. தேவசகாயம் கரணவை கத்தோலிக்க வாலிபர்களுக்கு அளித்த விருந்துபசார வைபவத்தில் குறிப்பிட்டார்.

கரவைக் கத்தோலிக்க வாலிபர் சங்கத் தலைவர் திரு. ஏ. ஜே. விஜயரத்தினம் திரு அம்புரோஸ் உட்பட வேறுபலரும் பேசினர்.

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
முத்துராமன்-காஞ்சனா
நடித்த
காதலிக்க நேரமில்லை

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 10-30, 4-15, 7-00, 10-00 மணி
ரோமியோ அன்ட் யூலியட்
(ROMEO & JULIET)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
போயா நாட்களில் 4 காட்சிகள்
சிவாஜி-பானுமதி
நடித்த
அறிவாளி

REGAL
Jaffna
Daily: 4-45, 7&9-45 p.m.
Poya days 4 Shows
THE NAKED WORLD

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 &9-45 p m
Guiliano Gemma
in
FORT YUMA GOLD
(Scope-color)

# பற்றிக்ஸ் வென்றது

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், திருகோணமலை சென். ஜோசப்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில், சென். பற்றிக்ஸ் கல்லூரி மிக இலகுவாக வெற்றி பெற்றது.

பல்லாயிரக் கணக்கான ரசிகர்களின் மத்தியில் மிக விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியின் ஆரம்பத்திலேயே, பற்றிக்ஸ் கோஷ்டியின் மத்திய முன்னணி வீரர் கொன்ஸலஸ் முதலாவது கோலைப் போட்டார். இதைத் தொடர்ந்து இக் கோஷ்டியின் பின்னணி வீரர் பிரான்ஸிஸ் இரண்டாவது கோலையும், 'பெனல்டி' மூலம் மூன்றாவது கோலையும் அடுத்தடுத்துப் போட்டார். இடைவேளையின் போது சென் பற்றிக்ஸ் 3—0 கோல்களைப் பெற்றிருந்தது

இடைவேளையின் பின் சென். ஜோசப்ஸ் கோஷ்டியினரின் விளையாட்டு கவர்ச்சியாகக் காணப்பட்ட போதிலும், இவர்களால் கோல்கள் எதையும் போட முடியவில்லை. இக் கோஷ்டியின் கோல்காப்பு வீரர் எதிர்க் கோஷ்டியின் பல மின்னல் அடிகளை மிகச் சாதுரியமாகச் சமாளித்து ரசிகர்களின் கரகோஷத்தைப் பலமுறை பெற்றார்.

சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் முன்னணி வீரர் கொன்ஸலஸ், இடைவேளையின் பின்னும் மேலும் இரு கோல்களைப் போட்டார். ஆட்டமுடிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 5—0 கோல்களால், திருமலை சென். ஜோசப்ஸ் கல்லூரியைத் தோற்கடித்தது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு ஈ. கே. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (தே. நி)

# ஒரே மைதானத்தில் கிடைத்த வெற்றியும் தோல்வியும்

பண்டத்தரிப்பு, வியா: இளவாலை என்றியரசர் கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 2 ம் பிரிவினர்களுக்கான ஆட்டத்தில் என்றியரசர் கல்லூரியினர் மிக இலகுவாக 6 கோல்களைப் போட்டனர். இந்துக் கல்லூரியினர் ஒரு கோலும் போடவில்லை.

1-ம் பிரிவினர்களுக்கான ஆட்டம் மிக விறுவிறுப்பான முறையில் நடைபெற்றது. இருபிரிவினரும் பாராட்டத் தக்க முறையில் விளையாடினர். இடைவேளைவரை விளையாட்டு 1-1 ஆக இருந்தது. இடைவேளையின் பின் இரு கோஷ்டியினரும் பலமாக மோதி 2-2 கோல்களைப் பெற்ற போதிலும் விளையாட்டு முடிவதற்கு இரு நிமிடங்களுக்கு முன் இந்துக் கல்லூரியினர் ஒரு கோலைப் போட்டு வெற்றியீட்டினர். என்றியரசர் கல்லூரி மைதானத்தில் இவ்வாட்டம் நடைபெற்றது.

...துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

## தபால் ஊழியர் மத்தியில்

தபால் தந்தி மந்திரியல் லவா! மக்களுடன் இணைந்து அவர்களுடன் மனம்விட்டு அவர்கள் குறைநிறைகளை தெரிந்து கொண்டதுபோல்,

...மதியையும் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கம் நெல்சபையொன்றை விரைவில் நிறுவவிருக்கிறது. இந்தநெல்சபை நிறுவப்பட்டதும் அரிசி விற்றல் நெல் கொள்வனவு ஆகியவற்றில் தனியார் ஈடுபடுதல் தடைப்படுத்தப்படும்

...யலாம்,
S. R. S.
ஜவுளி மாளிகை
எஸ். ஆர். செல்லத்துரை.
216, கே கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 296

# போலிகள் ஜாக்கிரதை

"ராதா பொபியூமறி அன் ராதா புறடக்ஸ்"
உரிமையாளர்களால்
தயாரிக்கப்பட்டு எமது ஸ்தாபனத்தின் மூலமாகவும் எமது வான்கள், லொறிகள் மூலமாகவும் மாத்திரம் இலங்கையில் விற்பனை செய்யப்படுகிறது.
பிரசித்திபெற்ற சகல ரோக நிவாரணி
# "ராதா மின்சார மருந்து"
இவ் அரிய மருந்தின் அமோகமான விற்பனையைக் கண்டு சிலர் போலி மருந்துகளைத் தயாரித்து அசல் ''ராதா மின்சார மருந்து''ப் பெட்டிகள் லேபல்கள் மாதிரி போலிகள் அச்சடித்து விற்பனை செய்து பொதுமக்களையும் வியாபாரிகளையும் ஏமாற்ற முற்பட்டிருக்கிறார்கள் என, எமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. சில வருமானம் குறைந்த படம் தயாரிப்பவர்களும், புளக் தயாரிப்பவர்களும், அச்சடிப்பவர்களும் இந்தப் போலித் தயாரிப்பாளர்களுக்கு அனுசரணையாக இருந்து வருகிறார்கள். இவர்கள்மேல் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டு கடுந்தண்டனைக்கு உட்படுத்தப்படுவர்.
பொதுமக்களும் வியாபாரிகளும், எமது ஸ்தாபனத்தின் மூலமாகவும் எமது வியாபார வான்களிலும், லொறிகளிலும் விற்பனையாகும் அசல்
"ராதா மின்சார மருந்து"
வாங்கி போலிகளைத் தவிர்க்குமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.
எமது பில் இல்லாமல் மின்சாரமருந்து வைத்திருக்கும் வியாபாரிகளும் மேற்படிகுற்றத்தை செய்ததாகக் கணிக்கப்படுவர்.
TRADE MARK
RADHA PERFUMERY & RADHA PRODUCTS
## எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி
53, K. K. S. ரோட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 541
160, செட்டியார் தெரு, கொழும்பு-11. தொலைபேசி: 35825

# தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு
அநேக வகைத் துணிகள் புதிதாக வரவழைக்கப்பட்டுள்ளன
இன்றே விஜயம் செய்யுங்கள்
# டயரூம்ஸ்
54, 60, மெயின்வீதி, (தொலைபேசி: 316) யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்காஸிய நெருக்கடிக்கு ரஷ்யாவின் புதிய யோசனைகள்

## ஐ.நா. தீர்மானத்தை முழுமையாக செயல்படுத்த வலியுறுத்தல்

மாஸ்கோ, அச். 15

மேற்காஸிய அமைதிக்கென சோவியத்யூனியன் திட்டமொன்றை வெளியிட்டிருக்கிறது. மேற்காஸிய நெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்று ஏற்படுவதற்கென தெரிவிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் விபரங்கள் பிராவ்டா பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்காஸிய நெருக்கடியில் சம்பந்தப்பட்ட நாடுகளுடன் ஐ நா. அமைதித் தூதுவர் டாக்டர் ஜாரிங் மூலம் தொடர்புகள் ஏற்படுத்த வேண்டும் என்றும், 1967ம் ஆண்டு மேற்காஸியா சம்பந்தமாக ஐ.நா. பாதுகாப்பு சபை நிறைவேற்றிய தீர்மானம் முழுமையாக அமுல் நடத்தப்பட வேண்டும் என்றும் சோவியத் திட்டம் கூறுகின்றது.

இரு தரப்பு எல்லைகளிலும் ராணுவச் சூன்யப் பிரதேசங்கள் பிரகடனப்படுத்தப்பட்டு, ஐ.நா. மேற்பார்வை படைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் இரண்டு கட்டங்களில் இஸ்ரேலியர் தாம் கைப்பற்றிய இடங்களிலிருந்து வெளியேற வேண்டும் என்றும் சோவியத் யூனியன் யோசனை தெரிவித்திருக்கின்றது.

நான்கு வல்லரசுகளால் அல்லது பந்தோபஸ்து சபையினுல் சர்வதேச அடிப்படையில் அமைதிக்கான உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாலஸ்தீன மக்களுக்கு விடுதலை

இஸ்ரேலியர் கைப்பற்றியுள்ள அரபுப் பகுதிகள் விடுவிக்கப்பட்டவுடன் பாலஸ்தீனமக்களுக்கு சுய நிர்ணய உரிமைவழங்கப்படும் என்று ஜோர்டான் மன்னர் ஹுசேன் தெரிவித்துள்ளார். ஜோர்டான் வானொலியிலும் டெலிவிஷனிலும் பேசிய மன்னர் ஹுசேன் ஜோர்டான் அரசாங்கம் பாலஸ்தீன மக்களை மதித்து நடக்கும் என்று குறிப்பிட்டார் விபரமாக அவர் ஒன்றும் பேசவில்லை.

### அல்ஜீரியர் விடுதலை

இஸ்ரேலியர் பிடித்து வைத்திருந்த இரண்டு அல்ஜீரியர்களை விடுதலை செய்திருக்கிறார்கள் பிரிட்டிஷ் விமானம் ஒன்றில் பிரயாணம் செய்த இந்த இரண்டு அல்ஜீரியர்களையும் டெல் அவிவில்வைத்து இஸ்ரேலியர் கைதுசெய்து வைத்திருந்தனர் அண்மையில் இரண்டு விமானங்களைத் திசை திருப்பி ஜோர்டான் பாலைவனத்தில் இறக்கிய அரபுக் கொமாண்டோக்கள் விடுத்திருந்த கோரிக்கைகளில் இந்த இரு அல்ஜீரியர்களும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதும் ஒன்ருகும்.

### எகிப்தியர் கோரிக்கை

மேற்காஸிய நிலைமைகளை ஐ.நா. பொதுசபை விவாதிக்க வேண்டும் என்று ஐக்கிய அரபுக்குடியரசு வேண்டுகோள் விடுத்திருக்கின்றது. ஐ.நா.வின் 25வது வருடாந்த நிகழ்ச்சிகள் முடிவடைந்தவுடன் இந்த விவாதம் ஆரம்பமாக வேண்டும் என்று எகிப்து கேட்டிருக்கின்றது. இம்மாதம் பிற்பகுதியில் ஆரம்பமாகவிருக்கும் இந்த விவாதம் பத்து நாட்கள்வரையில் தொடர்ந்து நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## வட. வியட்னுமும் நிராகரித்தது

ஹனேய், அக். 15

இந்தோசீன அமைதிக்கு அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸன் தெரிவித்திருந்த யோசனைகளை வடவியட்னும் அதிகாரபூர்வமாக நிராகரித்துள்ளது.

வடவியட்னும் வெளிநாட்டமைச்சு வெளியிட்ட செய்தியொன்றில் இந்தோசீனு சம்பந்தமாக சர்வதேசமகாநாடு நடைபெறவேண்டும் என்ற யோசனையினுல் பயன் ஏதும் ஏற்படப்போவதில்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடவியட்னுமின் இந்த நிராகரிப்பு இறுதி முடிவாக இருக்கமுடியாது என்று வாஷிங்டனில் வெள்ளை மாளிகை அதிகாரிகள் கருதுகிருர்கள்.

— —

## அரிசி இறக்குவதில் தாமதம்

மாவிட்டபுரம், வியாழன்

காங்கேசன்துறையில் தங்கியுள்ள அரிசிக் கப்பலில் இருந்து சென்ற சில தினங்களாக அரிசி இறக்குவது தடைப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை துறைமுகத்தில் அரிசி இறக்குமதி செய்துகொண்டிருக்கும் சீன கப்பலிலிருந்து சென்ற சில நாட்களாக கடல்நிலை சீராக இல்லாததால் அரிசி இறக்குவது தடைப்பட்டுள்ளது. கடல் கொந்தளிப்பாலும், அடிக்கடிமழைபெய்து கொண்டிருப்பதாலும் வள்ளங்கள் சென்று அரிசியை இறக்குமதி செய்ய முடியாதுள்ளதால் கப்பல் காத்து நிற்கிறது.

9 ஆயிரம் தொன் அரிசியுடன் வந்த இக்கப்பலில் இருந்து இன்னும் 2600

## ஆஸிய, ஆபிரிக்க எழுத்தாளர் மாநாடு

புதுடில்லி, அக். 15

நம்பர் மாதம் புதுடில்லியில் நடைபெறவிருக்கும் ஆசிய-ஆபிரிக்க எழுத்தாளர் மகாநாட்டிற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

கல்கத்தா, சென்னை, பம்பாய், ஹைதராபாத், அலஹாபாத், ஜய்ப்பூர், ஜுலுந்தூர் முதலிய நகரங்களில் பிரதேச மகாநாடுகளுக்கு தேசிய தயாரிப்புக் கமிட்டி ஏற்பாடுசெய்துள்ளது.

ஆசிய-ஆபிரிக்க எழுத்தாளர் இயக்கம் 1956-ல் டில்லியில் ஜவஹர்லால் நேருவின் தலைமையில் கூடிய எழுத்தாளர் மகாநாட்டுடன் ஆரம்பமாகியது

டில்லி மகாநாட்டின் பிரதான அம்சங்களில் ஒன்ருக ''தாமரை'' பரிசளிப்பு இடம் பெறும்.

இப்பரிசுத்திட்டம் 1765-ம் ஆண்டில் நிறுவப்பட்டது.

1968, 1969-ம் ஆண்டுகளுக்கான பரிசாளர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இப்படி கௌரவிக்கப்படவிருக்கும் எழுத்தாளர்களில் ஹிந்திக் கவிஞர் பச்சானும் உஸ்பெக் பெண் கவிஞர் ஸுல்ஃபியாவும் இடம்பெறுவர்.

புதுடில்லியில் நடைபெறவிருக்கும் ஆசிய-ஆபிரிக்க எழுத்தாளர் மகாநாட்டில் 60 நாடுகளைச் சேர்ந்த 200 எழுத்தாளர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள்.

## 'போராட்டமே சிறந்தவழி'

### திரு. கார்த்திகேயன் கருத்து

யாழ்ப்பாணம், வெள்ளி

சோஷலிஸ அரசாங்கம் சாத்தியமாக வேண்டுமென்ருல் நாட்டில் ஊடுருவிப் போயிருக்கும் பிரபுத்துவ நிலையும், முதலாளித்துவமும் நீக்கப்பட வேண்டுமென்றும் அந்த நிலையை நீக்குவதற்கு போராட்டமே சிறந்த வழியென்றும், திரு. எம். கார்த்திகேயன் திரு. முதலி சின்னத்தம்பியின் நினைவு தினக் கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சன்மார்க்க ஐக்கிய வலிபர் சங்கத்தினுல் நேற்று முன்தினம் நடைபெற்ற தியாகி முதலி சின்னத்தம்பியின் 26வதுநினைவு தினம் திரு என். சி. குருசாமி தலைமையில் நடைபெற்றது.

திரு. ஏ. விஸ்வநாதன் பேசும்போது தெரிவித்தவை வருமாறு: உண்மையான சோசலிச ஆட்சியினுல்தான் சமூகக் குறைபாடுகள் தவிர்க்கப்படமுடியும். சரியான முறையில் சோசலிச ஆட்சி நிலைகொள்ளும் போது சாதிப் பிரச்னைகள் அ[illegible]ப்போகும்.

திரு. ஐ ஆர் அரியரத்தினம் போசும்போது ஏகாதிபத்திய[illegible] வர்களின் [illegible] திகளினுல் சமூக சாதிப்பா[illegible]பாடு நீங்கமுடியாது.

குணசிங்கம் ஆகியோரும் பேசினர்

— —

## அமரர் கந்தவனம் பொன்னம்பலத்தின் 5 வது நினைவு விழா

மாவிட்டபுரம், வியாழன்

சமூகத் தொண்டர் அமரர் கந்தவனம் பொன்னம்பலத்தின் 5-வது நினைவு விழா இம்மாதம் 16-ம் திகதி மயிலிட்டி ஞானோதயா வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

கட்டுவன் முற்போக்கு வாலிப முன்னணியின் ஆதரவில் கூட்டுறவு மாகாண வங்கியின் ஒய்வுபெற்றமுகாமையாளர் திரு ஜே. ஸ். டி. அரியரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் திரு. வ. பொன்னம்பலம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இவ்விழாவில் நினைவுரைகளும், 'வேலி அடைப்போமா' என்னும் விடயம் பற்றிய கவியரங்கும், 'காவியம் கண்டகயமைகள்' என்னும் விடயம் ப[illegible]ய கருத்தரங்கும், கலை[illegible]ரங்கும் இடம்பெறும்.

— —

## கோரிக்கை

# 'சத்தியாக்கிரகம், சிரமதானம்: நாவுக்கரசரே ஆரம்பித்தார்'

— பண்டிதை அப்பாக்குட்டி

உடுப்பிட்டி, வியா.

'இருபதாம் நூற்ருண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் 7-ம் நூற்ருண்டில் வாழ்ந்த நாவுக்கரசருக்கு விழாவெடுக்கிருேமென்ருல் நாவுக்கரசரின் மங்காத புகழும், தெய்வபக்தியும் தான் காரணம். நாம் இன்றுபுனிதமாக போற்றிவரும் உண்ணுவிரதம், சத்தியாக்கிரகம், சிரமதானம் இத்தனையையும் 7-ம் நூற்ருண்டிலேயே தொடக்கிவைத்தவர் நாவுக்கரசரே. எப்பொழுதும் அச்சமிருக்கும்இடத்தில் கடவுள் நம்பிக்கை இருப்பதில்லை.'

இவ்வாறு தென்கருணையம்பதி இந்துவாலிபர்சங்க 2-வது ஆண்டு நிறைவுவிழாவில் 'நாவுக்கரசரும் நாமமும்' என்னும் பொருள் பற்றிப் பேசுகையில், 'சிவத்தமிழ்ச் செல்வி' பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி குறிப்பிட்டார். செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

'பேசிக்கொண்டிருப்பதால் பிரயோசனமில்லை. கொள்கையில் தான் சகல திறமையும் தங்கியிருக்கின்றன. நாம் எம்மைச்செயல் வீரர்களாக்கிக்கொள்ள வேண்டும் இளைஞர்கள் பக்தி மார்க்கத்தில் சென்று தெய்வீகப்பணியை நிலை நாட்டவேண்டும். மனம், வாக்கு, காயம் மூன்றிலும் அன்பு வாழ்க்கை வாழ்ந்த நாவுக்கரசரை நாம் பின்பற்றினுல பெரும் பேறடையலாம்.

அன்புநெறியில் வாழ்ந்து மற்றவர்களும் அந்நெறியில் வாழவேண்டுமென்று நாவுக்கரசர் தனது பாடல்கள் மூலம் புகட்டிவந்தார். தெய்வவழிபாடு, கடவுள் நம்பிக்கைஉள்ளவர்கள் மத்தியில் எத்தகைய அச்சமும் நிலவுவதில்லை.'

இவ்விழாவுற்குத் தலைமை வகித்த 'சைவத்தமிழ் மணி, ஸ்ரீலஸ்ரீ கை திருஞானசம்பந்தக்குருக்கள் தனது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:-

'எம்மத்தியில் வீண் சர்ச்சைகளையும் தேவையில்லாத கருத்துக்களையும் கைவிடவேண்டும். எதைச்செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது எனச்சிந்தித்துச் செயல்படவேண்டும். ஆண்டவனுல் படைக்கப்பட்ட

ளைப்படித்து அவற்றைநன்குணரவேண்ம்டு'.

வித்துவான் திரு. கணபதிப்பிள்ளை பேசும்போது, வாலிபர்கள் நல்வாழ்வு வாழக்கூடிய பிரசுரங்களை வெளியிடவேண்டுமென்றும் சைவமதத்துக்கு மாருன நடவடிக்கைகளை ஒடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

கவிஞர் திரு. இ. நாகராஜன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் காரை. செ. சுந்தரம்பிள்ளை, அரியாலையூர் வே ஐயாத்துரை. வி. கந்தவனம், கருணையோகன். அல்வை. த சுந்தரன் ஆகியோர் தமது கவிதைகளை அரங்கேற்றினர். கவிஞர் கருணையோகனுக்கு தென்கருணை இந்துவாலிபர் சங்கத்தால்பாராட்டி வாழ்த்துமடல் வழங்கப்பட்டது. கவிஞர் இ. நாகராஜன், கவிஞர் கருணையோகனை வெகுவாகப் பாராட்டி வாழ்த்திஞர்.

கலைவாணர் வில்லிசைக் குழுவினரின் 'சிலம்புச் செல்வி' வில்லுப்பாட்டுநிகழ்ச்சியும், இலங்கை வானொலி புகழ் சேவாஸ்டேஜ் கொமடியன்ஸாரின் 'நவீனமார்க்கண்டேயர்' கதாப்பிரசங்கமும், 'நக்கீரர்' நாடகமும் இடம்பெற்றன. கரணவாய் தெற்கு, சோளங்கன் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் வழக்கறிஞர் திரு. வீ. கே. நீலகண்டன் வரவேற்புரை நிகழ்த்திஞர்.

திருமுறை ஒதுதல், கலைப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

புதிய அரசியலமைப்பு:

## 'தனிச் சிங்களச் சட்டத்தை நீக்கிவிட வேண்டும்'

மாவிட்டபுரம், வியா

'மொழிப் பிரச்னையால் தான் இன்று தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மொழிப் பிரச்னையில் நல்ல முடிவைக் காண வேண்டுமானுல் அதற்கு ஒரேவழி தனிச் சிங்களம் என்ற கட்டுப்பாடு இருக்கக் கூடாது எனவே தனிச்சிங்களச் சட்டத்தை நீக்கி இரு இன மொழிச் சட்டத்தைப் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தில் வகுக்கவும்.

இவ்வாறு பளை வீமன் காமம் கிராம முன்னேற்றச் சங்கம் அரசியல் நிர்ணய சபைக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தனிச்சிங்களம் என்ற கட்டுப்பாடு இருக்கும்வரை தமிழினம் சுபீட்சமாக வாழமுடியாதநிலை ஏற்படுவதுடன் அரசு நல்லமுறையில் நாட்டை வழிநடத்த முடியாதிருக்கும். ஏனெனில் கடந்தகால சரித்திரங்களைப் பார்க்கும்போது தமிழ் மக்களிடையே சிங்களம்தான் ஒரு மொழியாக இருக்க வேண்டும் என்று கூறிதனிச் சிங்களச் சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வந்

படிக்கலாம். இதன்மூலமே மொழிப்பிரச்னைக்கு தீர்வு காணலாம்.

— —

உல்லாசப் பிரயாணிகளுக்கு

## 1400 புதிய அறைகள்

கோட்டை, வியா.

1973-ம் ஆண்டளவில் உல்லாசப் பிரயாணிகளுக்கு நல்லவசதிகளைச் செய்து கொடுப்பதற்கு 1400 அறைகள் கட்டி முடிக்கப்பட்டு விடும் என உல்லாசப் பிரயாணிகள் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வருட இறுதியில் 400 புதிய அறைகளைச் சபை நிறுவவியிருக்கிறதுநாட்டிற்குப் பெருந்தொகையாக வரும் உல்லாசப் பிரயாணிகளுக்கு இடவசதியைச் செய்து கொடுப்பதற்காகவே உல்லாசப் பிரயாணிகள் சபை இந்த நடவடிக்கைகளை எடுக்கிறது.

— —

## வெளிவேலை உத்தியோகத்தர் சங்கம்

உடுப்பிட்டி. வியா

# சீனு மீண்டும் அணு குண்டு வெடிக்கச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனு மீண்டும் அணு குண்டு வெடித்தது

ஹாங்காங், அக். 15 கம்யூனிஸ்ட் சீனு மேலும் ஓர் அணுகுண்டை வெடிக்க வைத்துப் பரிசோதனை நடத்தியிருக்கின்றது.

சோவியத்யூனியன், அமெரிக்கா ஆகிய நாடுகளும் கூட அணுகுண்டுகளை வெடித்துப் பரிசோதனை நடத்தியிருக்கின்றன. சீனு தனது சிங்கியாங் மாகாணத்தில் காற்று மண்டலத்தில்தனது 11-வது அணுகுண்டு சோதனையை நடத்தியது. 1964ம் ஆண்டில் தனது முதலாவது பரிசோதனையை நடத்தியது. இப்போதைய குண்டு சுமார் மூன்று அல்லது நான்கு மெகாவாட் சக்திகொண்டது என்று கருதப்படுகின்றது

இந்தக் குண்டு சோதனையை இந்திய அணு சக்தி நிலையமும் பதிவு செய்துள்ளது. சோவியத் யூனியன் நிலத்துக்கடியில் ... நடத்தியுள்ள சோதனையையும் இந்திய நிலையம் பதிவுசெய்துள்ளது.

அமெரிக்கா, சோவியத் யூனியன் பிரிட்டன் ஆகிய நாடுகள் நிலத்துக்கடியிலேயே அணுகுண்டு சோதனைகளை நடத்திவருகின்றன. காற்றுமண்டலத்தில் சோதனைகளை நடத்துவதில்லையென இந்த நாடுகள் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளன ஆனல் பிரான்சும் சீனுவும் காற்று மண்டலத்திலேயே சோதனைகளை நடத்தி வருகின்றன.

---

இறக்குமதி செய்ய முடியாதுள்ளதால் கப்பல் காத்து நிற்கிறது.

9 ஆயிரம் தொன் அரிசியுடன் வந்த இக்கப்பலில் இருந்து இன்னும் 2600 தொன் அரிசி இறக்குமதி செய்யப்படவிருக்கிறது.

---

...ப்பெறும்.

திரு. ஐ. ஆர் அரியரத்தினம் பேசும்போது ஏகாதிபத்தியத்தை வரவேற்கின்றவர்களின் வெறும் வாக்குறுதிகளினுல் சமூக சாதிப் பா...பாடு நீங்கமுடியாது, மு...பாற்கு எண்ணம் உடைய இன்றைய அரசுசிறுபான்மை இனத்தவர்களின் பிரச்னைகளை நீக்குவதற்கு வழிகோலும் என்ருர்.

திரு. என். ரி. செல்லத்துரை எம். எம். சி. பேசும்போது சம்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்தின் சேவையேஇன்று நாட்டில சிறுபான்மை இனத்தவர்களின் பிரச்னைகள் தீர்வதற்கு வழிகோலியது என்ருர்.

ஜனுப் எம். ஜி. பஷீர் எம் எம். சி. திருவாளர்கள் வி. எம். பொன்னையா, எஸ்.

... கருத்தரங்கும், க...ரங்கும் இடம்பெறும்.

## கோரிக்கை

பருத்தித்துறை வி...ன் கரவெட்டி மேற்கு, கரவெட்டி வடக்குப் பகுதிகளுக்குப் புதிய சமாதான நீதிபதிகள் நியமிக்கப்படவேண்டுமென நூற்றுக்கணக்கான சைவ - கத்தோலிக்க மக்கள் கைச்சாத்திட்டவிண்ணப்பங்கள் நீதியமைச்சருக்கு அனுப்பப்பட்டு அவற்றின் நகல் பிரதிகள் உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. ஜெயக்கொடியிடம் கொடுக்கப்பட்டுள்ளன.

---

... கருத்துக்களையும் கைவிடவேண்டும். எதைச்செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது எனச்சிந்தித்துச் செயல்படவேண்டும் ஆண்டவனுல் படைக்கப்பட்ட இந்த உடல் போலியானது. எமதுயிர் ஆண்டவனுக்குத் தான் சொந்தமானது.

சைவசித்தாந்தக் கருத்துக்களைக்கூறஎவருக்கும்உரிமையில்லை. தாம் சொல்வது சரியென்று கூற எவருக்கும் அருகதையில்லை. ஆணவத்தின்மூலமே எமதுநிலை தெளிவடையும். சைவ மதத்தவர்கள் நல்ல மார்க்கங்களிருக்கத் தவருன பாதையில் செல்வதுவேதனைக்குரியது. நாயன்மார்களுடையபுராணங்கள்எமக்கு வழிகாட்டிகள். வேத ஆகமங்...

---

... பார்க்கும்போது தமிழ் மக்களிடையே சிங்களம்தான் ஒரு மொழியாக இருக்க வேண்டும் என்று கூறிதனிச் சிங்களச் சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வந்தால்தான் தமிழ்மக்கள் போராட்டம் நடத்தினர். இதனுல் ஆட்சியைக் கூட நல்ல பாதையில் இட்டுச் செல்ல முடியாது. ஆட்சியாளர் திகைத்தனர். இந்நிலை தொடர்ந்தும் இருக்காது. சுபீட்சமான ஒரு வாழ்வை அமைக்க வேண்டுமானுல் தனிச்சிங்களம் என்ற கட்டுப்பாடு நீங்கத் தக்கதாக அரசியல் நிர்ணய சபை அமைய வேண்டும். அப்போது விரும்பியசிங்களவர் தமிழ் படிக்கலாம். விரும்பிய தமிழர் சிங்களம்

## வெளிவேலை உத்தியோகத்தர் சங்கம்

உடுப்பிட்டி. வியா வடமாகாண நெற்காணிச் சட்ட வெளிவேலை உத்தியோகத்தர் சங்க விசேஷ கூட்டம்அடுத்தமாதம் யாழ் நகரில் நடைபெறுமென்றும் இக் கூட்டத்தில்வெளிவேலை உத்தியோகத்தர்களின் சிங்களத் தேர்ச்சி, 10 வருட சேவைமுடித்தவர்களை 1வது தரத்திற்குஉயர்த்துவதுஆகியவை பரிசீலனை செய்யப்பட்டுஇவ் விஷயமாகஅமைச்சரை பேட்டிகாண்பதுசம்பந்தமாகவும்ஒருமுடிவெடுக்கப்படுமென்றும் தெரியவருகிறது.




உங்கள் பரமவிரோதிகளை அறவே ஒழித்திடுக!

| பீ எச் சீ | களைக்கொல்லி 'M-50' | சுமித்தியன் | 'என்ட்ரெக்ஸ்' 20 | களைக்கொல்லி 'D' | 'அசொட்றின்' 60 | களைக்கொல்லி 'P-20' | 'ஸ்டாம்' எவ்-34 |
|---|---|---|---|---|---|---|---|
| நெற் பூச்சி கட்டுப் பாட்டிற்கு பீ எச் சீ 10% தூள். சிறந்தது. பீ எச் சீ 6% துணுக்குகளும், பீ எச் சீ 20% ம், தண்டு அரிப்புக்கு உகந்தது. | 'எம்சிபிஏ' யின் ஓர் விசேஷ வகுப்பாடான இக் 'களைக்கொல்லி,' 3-5 வாரம்வரை வளர்ந்திருக்கும் நெற்தானியத்தில் தெழித்து அகன்ற இலைக்களைகளையும், கோரைப் புல்லையும் தெரிந்து அழிக்கவல்லது. | ஓர் பாதுகாப்பான, நிச்சய கிருமிநாசினி. விசேஷமாக குமிழ் ஈ கட்டுப் பாட்டிற்கு உகந்தது. | இன்று அதிகமாகப் பாவிக்கப்படும், அதி சிக்கனமான, 'சகல-நிவாரண' கிருமி நாசினி. எல்லா நெற்களை அழிப்பிற்கும் உகந்தது. | 3-5 வாரம் வரையிலான நெற் தானியத்தில் தெழித்து அகன்ற இலைக் களைகளையும், கோரைப் புல்லையும் தெரிந்தகற்றும் 2, 4-D விகித 'எஸ் தர்' வகுப்பாடாகும். | ஏனைய கிருமிநாசினிகளால் அழிக்க முடியாத நெற் பீடைகளை முற்றழிக்க வல்ல, ஓர் வன்மைமிகு புதிய படிமுறை சகல-நிவாரண கிருமிநாசினியாகும். | ஈரலிப்பான நிலத்தில் பயிரிடும் நெல்வகையின் வேளாண்மைக்கு முன் தெளிக்க உகந்தது. இவ் வேளை சகல தாவரங்களதும் முற்றழிப்பிற்கும், முதல் மழையுடன் தெழிக்கச் சிறந்தது. வித்துக்கள் விதைத்தலின் பின்முளைத் தலைத்தடுக்க இம்முறை உகந்தது. | 7-18 நாள் வரையிலான நெற்தானியத்தைத் தாக்கும் அகன்ற இலைக்களை, கோரை, புல் அனைத்தையும் தெரிந்தழிக்க உகந்த புதிய சிராக்கிய 36% வகுப்பாடான 3, 4 டயிஏ சேர்வையாகும், |




லங்கெம் இலங்கை லிமிட்டெட்

செலிங்கோ ஹவுஸ் த. பெ. 919 கொழும்பு. டெலிபோன்: 28333   இரசாயன சேவைக்கு மறுசொல் லங்கெம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உண்மையான அறிவு இருக்கும் இடத்தில் ஆனந்தம் இருக்கிறது. அங்கே கவலைக்கு இடமில்லை. சத்தியம் நிரந்தரமாக இருப்பதுபோலவே அதிலிருந்துவந்த ஆனந்தமும் நிரந்தரமானது.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna: Telephone: 889.

சௌம்ய வருஷம் சாதாரண வருஷம் புரட்டாசி மாதம் 30-ந் திகதி (16-10-70)


## இளைஞர் நிலைமை

வாழ்க்கையில் விரக்தியும் வேதனையும் அடைந்துள்ள இளைஞர்கள் மத்தியில் புரட்சிகர எண்ணங்கள் தலைதூக்கிவிட்டனவென்றும் இந்த நாட்டில் குழப்பங்கள் ஏற்பட்டு. இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடாமல் இருக்க வேண்டுமாயின், அரசியல் தலைவர்கள் இன, மத, கட்சிபேதங்களை மறந்து இளைஞர்களின் அடிப்படைப் பிரச்னைகளை உடனடியாகத் தீர்க்கவேண்டும் என்று தபால்தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் தமது மட்டக்களப்பு விஜயத்தின் போது ஒரு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார். இதே சமயம் மாத்தளை மாஜிஸ்திரேட்டும் மாவட்டநீதிபதியுமான திரு. சிவா செல்லையா உலகச் சிறுவர் தின விழாவில் பேசுகையில் பத்து வயதுக்கும் இருபது வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்கள் திருட்டு, கொள்ளை, வீடு உடைத்தல் போன்ற பாரிய குற்றங்களில் ஈடுபடுவதைக் குறிப்பிட்டு இளைஞர்களின் இந்த நிலைமைக்கு பாடசாலைகளோ அரசாங்கமோ மட்டும் தீர்வுகாண முடியாதென்றும் பெற்றோருக்கும் ஒவ்வொரு குடும்பத்தவருக்கும் இதில் பெரும் பொறுப்பு உண்டு என்றும் குறிப்பிட்டிருப்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

இந்த நாட்டிலுள்ள இளைஞர்கள் என்னசெய்வதென்றறியாதநிலையில் தத்தளிக்கிறார்களென்பதையும் சமுதாயத்தைப் பற்றியோ நாட்டைப் பற்றியோ எந்த விதக் கவலையும் கொள்ளாமல் எதற்கும் தயாராகும் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்களென்பதையும் அமைச்சரினதும் நீதிபதியினதும் கருத்துக்கள் தெளிவுபடுத்துகின்றன.

இளைஞர்கள் இந்த அவல நிலைக்கு வருவதற்கான அடிப்படைக் காரணமென்ன எப்படிப் பார்த்தாலும் நாட்டின் கல்விமுறைதான் இதற்கெல்லாம் காரணமென்பது தெளிவாகும். கல்வித் திட்டத்தை மாற்றியமைப்பதாகச் சொல்லிக் கொண்டு இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவும் நிலைமையை மோசமாக்கியிருக்கின்றனவே யொழிய திருத்தவில்லை எனவே இனியும் நாட்டுக்கேற்ற சரியான கல்வித்திட்டத்தை உருவாக்குவதில் காலம் தாழ்த்துவது அமைச்சர் குமாரசூரியர் அஞ்சுவது போல் நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்தி இரத்தஆறு பெருக்கெடுத்தோடவே வழிவகுப்பதாக இருக்கும்.

இன மத வேறுபாடுகள் நாட்டுக்கு ஆபத்து என்பது உண்மையே, ஆயினும் இன்று நமது நாட்டில் இன, மத வேறுபாடுகளை விட கட்சி வேறுபாடுதான் பெரும் தீங்காக இருக்கிறது தேர்தலில் தோற்ற அபேட்சகர்கள் அடுத்த தேர்தலில் தாமும் தமது கட்சியும் எப்படி வெற்றியீட்டலாம் என்பது பற்றியும் அதற்காக என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ளலாம், இளைஞர்களை எப்படிப் பயன்படுத்தலாம் என்பதிலும், தேர்தலில் வெற்றியீட்டிய அபேட்சகர்கள் தாங்கள் மீண்டும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கும் தங்கள் கட்சி வெற்றிபெறுவதற்கும் எதையெதைச் செய்யலாமென்பதிலும்தான் கவனம் செலுத்துகின்றனர். இதனால் தான் குடும்பங்களில் கூட பிரச்னைகளும் பிளவுகளும் ஏற்படுகின்றன.

எனவே கட்சி அரசியல் பிரச்னையும் இளைஞர்களின் இன்றைய நிலைக்கு முக்கிய காரணமாக அமைகிறது

இளைஞர்களின் இன்றைய நிலையை அரசாங்கமும் அரசியல், சமய, சமூக ஸ்தாபனங்களும் முக்கிய பிரச்னையாகக் கருதி கலந்தாலோ

# பிரார்த்தனையால் நினையாத அதிசயமும் நடக்கும்

### ஜயாறன் எழுதுவது

தெய்வத்தைக்கூடத் தொழத் தேவையில்லையாம். கொழுனனைத் தொழுபவள் 'பெய்' என்றால் மழை பொழியுமாம். பொய்யாமொழியாரான திருவள்ளுவரின் வாக்குஇது. மழையை 'நில்' என்று அவரே கூறினால், மழை நிற்கவும்கூடும். ஆனால் அது திருக்குறளில் சொல்லப்படவில்லை.

மூன்று நாட்களுக்கு முன் கொழும்பிலே ஓர் அன்பர் 'சஷ்டியப் பூர்த்தி' (60-வது வயது பூர்த்தி) விழாக் கொண்டாடினார். அவர் வசிக்கும் வீடு அவ்வளவு பெரிதல்ல. ஆனால் அவருக்கு நண்பர்கள் அதிகம். அவ்விழாவுக்குப்பலரையும் அவரது 6 புதல்வர்களும் சேர்ந்து அழைத்திருந்தனர். இந்த வைர விழாவை, தந்தைக்குச் செய்துவைப்பது மக்களின் பொறுப்பே.

கொழும்பில் ஒவ்வொரு நாளும் இக்காலத்தில் மழை பெய்கிறது. "குருவாயூர் அப்பா, இன்று மழை வராமல் காப்பாற்று'' என்று அந்த அன்பர்காலையில் மிகக் கவலையுடன் வேண்டிக் கொண்டாராம். மழை வந்தால் எல்லாம் குழம்பிவிடும் என்று கவலை. அவர் கேட்டுக்கொண்டதுபோல் அன்று மழையில்லை. வெயிலும் இல்லை. மேகங்கள் குடை பிடித்து சீதோஷ்ணநிலை நுவரேலியாவைப்போல் 'குளு குளு' என்று இருந்தது. விழவும் சிறப்பாக முடிந்தது. இதைக்கண்டதும், அவர் கண்ணீர் மல்க, தமது பிரார்த்தனையை 'குருவாயூரப்பன்' கருணைகூர்ந்து நிறைவேற்றிவிட்டதாக உள்ளம் குழைந்து சொன்னார். உண்மையாகப் பிரார்த்தனை செய்தால், பெய்யும் மழையையும் 'நில்' என்றாலும் அது நின்றுவிடுமென்பதை அன்று நேரில் கண்டேன். பிரார்த்தனையால் நினையாத அதிசயமும் நடக்கும் என்ற வாக்கு பொய்யல்ல.

0 0 0

அறுபது வயது ஆவது ஒரு பெரிய காரியமா? இதற்கு ஒரு விழாவா? என்று சிலர் கேட்கக்கூடும். ஆனால் ஆபத்துக்கள் நிறைந்த வாழ்வு இது எந்தசமயமும் எதுவும் ஏற்படலாம். அதற்கெல்லாம் தப்பி, அறுபது ஆண்டுகள் ஒருவர் தமது துணைவியுடன் இல்லறத்தை வெற்றியாக நடத்தி, நல்ல குழந்தைகளைப்பெற்று வாழ்வதாயின் அது பெரிய காரியமே பல அன்பர்களும் வந்திருந்து, பரிசுகள் பல அளித்து அவர்களை நீடூழி சுகத்துடன் வாழ வாழ்த்தினர்.

கிரிக்கெட் பாஷையிலே '60 நாட்டவுட்' என்று கூறக்கூடிய இவ்விழாவில் '100 நாட்டவுட்' ஆக அத்தம்பதிகள் பயனுள்ள வாழ்வு வாழப் பலரும் வாழ்த்தியது, அவர்களுக்கு வாழ்விலே புதிய நம்பிக்கையும் உற்சாகமும் அளித்தது. மக்கள் குரல் தானே மகேசன் குரல். அவர்களும் இந்த வைபவத்தில் பல ஏழைகளுக்கும் பல பல தானங்கள் அளித்தனர். அன்று அத்தம்பதிகள் மாலை மாற்றிக் கொண்டதையும், புருஷன் தன் மனைவிக்கு ஒரு புதுத்தாலி கட்டியதையும் பலரும் கண்டுகளித்தனர்.

அறுபதாவது வயது கொண்டாடுவதில் மற்றொரு நோக்கமுமுண்டு அதுவரை ஒருவர் தமக்கும் தமது குடும்பத்துக்குமாக வாழ்கின்றார். இனி உலகத்தையே தங்கள் பெரிய குடும்பமாக மதித்து உலக மக்களுக்காக அவர்கள் வாழ மீண்டும் தங்களை அர்ப்பணம் செய்துகொள்வதே இவ்விழாவின் கருத்து. 60-க்கு மேல் 'வானப்பிரஸ்த' ஆசிரமம் என்பர். வனத்திற்குச் செல்லவேண்டியதில்லை. வீட்டிலிருந்து கொண்டே, மக்கள் குலத்துக்காக வாசுதேவ குடும்பகம்என்றுஅப்பெரிய குடும்பத்துக்காகத் தங்களை அர்ப்பணித்தால் சமூகமும், உயிர்களும் குறையின்றி வாழலாம், தங்கள் சொந்தக் குடும்பத்துக்கான கடமை அநேகமாக முடிந்த அந்த வயதில், அவர்களது அனுபவத்தையும் ஆற்றலையும், பின்னர் பொதுநலனுக்காகப் பயன்படுத்த அவர்கள் முன்வருவதாயின், அது சமூகத்தால் மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் கொண்டாடவேண்டியதுதானே!

இக்காலத்தில் சிலர் 80 வயதில் கூட தங்கள் குடும்பத்துக்கே உழைக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். பாவம்! அது வேறு விஷயம்

0 0 0

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசன் எந்தை இணையடி நீழலே.

— நாவுக்கரசர்

## 'பாடுபடும் வர்க்கம் நிறைந்த வாழ்வு வாழ வேண்டும்'

பருத்தித்துறை, வியா

''ஒரு நாடு பலதரப்பட்ட அபிவிருத்தியடைய வேண்டுமாயின் அந்நாட்டின் பாடுபடும் வர்க்கத்தினரான தொழிலாளி, பாட்டாளிகள் நிறைந்த வாழ்வு வாழவேண்டும், அவர்கள் அங்கீகரித்த பொருளாதார அபிவிருத்தித்திட்டங்களே செயல்படுத்தப்படல்வேண்டும் இக்காரணத்தினாலேயே சோவியத்நாடு போன்ற சோஷலிச சமுதாயங்களில், அரசாங்கம் தனது திட்டங்களை சுமார் ஆறுமாதகாலம் தொழிலாளரின் விவாதத்திற்கு ஒதுக்கிவைத்து, பின்னர் அவர்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளைத் திரட்டி அவற்றைச் செயல்படுத்துகின்றன.''

இவ்வாறு இ மாதம்19-ம் திகதி சைப்பிரஸ் செல்லவிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரும், தொழிற் சங்க வாதியுமான திரு. பொன் குமாரசாமி, கம்யூனிஸ்ட் வாலிபர் தமக்களித்த பிரியாவிடை வைபவத்திற் கூறினார், பருத்தித்துறை நகர சபை உபதலைவர் திரு. கே சேனாதிராசா தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் நியாயவாதி திரு. எஸ் ஜெயசிங்கம், திரு. கே. எஸ். சிதம்பரநாதன், எஸ் விஜயானந்தன், திரு. தா. இராசரத்தினம் ஆகியோரும் பேசினர்.

## அழகக்கோன் ....

(1ம் பக்கத்தொடர்ச்சி)


எல்லாரும் வீட்டுக்குப் போனார்கள். நான் நோட்டீஸில் உள்ள விஷயம் பற்றி அபேட்சகர் ரஹீமுக்குச் சொன்னேன். அவர் தான் மனுதார், அன்று மாலை 4 மணிக்குச் சென்று நோட்டீஸை ரஹீமிடம் காட்டினேன். கடந்ததேர்தலில் நான் யாருக்கும் தீவிரமாக வேலை செய்யவில்லை. அந்த நோட்டீஸில் ரஹீம் தாக்கப்பட்டதாகக் கூறி சில வசனங்களைக் காட்டினேன். அந்த நோட்டீஸில் உள்ள வசனங்கள் இவைதான்:

'மன்னார் பட்டின சபைத் தலைவர் இரண்டொரு அங்கத்தவர்களைத் தன்வசப் படுத்திக் கொண்டு தான் இட்டதே சட்டமென்று பொது மக்களை நசுக்கிவருகிறார் ஒரு முஸ்லிம் தலைவராக இருக்கும் இப் பட்டினசபையில் நிர்வாக சீர்கேட்டால், 1969ம் ஆண்டு ஏன் பட்டினசபையைக் கலைக்கக் கூடாது என்று உள்ளூராட்சி மந்திரி திரு பிரேமதாசாவினால் கேட்கப்பட்டு வந்ததை மன்னார் பட்டின மக்கள் அறிவார்கள், இப் பேர்ப்பட்ட கேவலமான கேள்வி தற்போதைய தலைவரைத் தவிர வேறு எந்தத் தலைவரிடமும் மன்னார் பட்டின சபை ஆரம்பித்த காலத்திலிருந்து இன்றுவரை கேட்கப்பட்டதில்லை. இப் பட்டின சபையையும் மக்களையும் ஒழுங்காக நடத்திக் கொள்ள முடியாத தலைவரைத் தெரியும். பெயர் தெரியாது. ஆளைத் தெரியும். நான் முகம் கைகால் கழுவியதும் பள்ளிக்குப் போனேன், அங்கு ஒரு பெரியமண்டபம்இருக்கிறது இருபக்கமும் திறந்த விறாந்தையும் இருக்கிறது, அங்கு நூறு பேருக்கு மேல் இருந்தார்கள். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் நடக்கும் தொழுகைக்கும் கிரமமாகப் போனேன் பெருநாளுக்கும் அங்கு தொழுகை நடக்கும், வெள்ளிக்கிழமை பகல் 12-30 மணிக்குத் தொழுகை ஆரம்பமானது. நான் மண்டபத்துக்கு நேராகப் போனேன் தொழுகையின் போதுமுதல் வேதம் ஓதுவார்கள் பின் மார்க்கப் பிரசங்கம் நடக்கும், லெப்பை மேடையில் ஏறுவார், 35, 40 நிமிடங்கள் பிரசங்கம் நடக்கும் பிரசங்கம் முடிந்த பின்னர் வரிசையாக நிற்பார்கள், லெப்பை சில வேதங்கள் சொல்ல தொழுகைக்கு வந்தவர்கள் தொழுகை செய்வார்கள், அதன் பின் கைகளை மடித்து துவிக் நடக்கும், பின் கதீஸ் பிரசங்கம் நடக்கும், தாராக்குண்டு பள்ளிவாசலிலுள்ள இரண்டு பள்ளிவாசலிலும் கதீஸ் தொழுகை நடக்கும் மீரான் பள்ளியில் லெப்பையாக சம்சுதீன் இருந்தார், மௌலவி கதீஸ் பிரசங்கம் செய்வார்கள்,

கடந்த மே 15-ம் திகதி கதீஸ் பிரசங்கம் நடந்து கொண்டிருந்தது. அன்று மஜீத் மௌலவி பிரசங்கம் செய்தார். அப்போது

# சமூகத் தொண்டர் பொன்னம்பலம்

## இன்று அவருக்கு நினைவு விழா



இன்று அமரர் திரு. கந்தவனம் பொன்னம்பலம் அவர்களின் ஐந்தாவது ஆண்டு நினைவு விழா அன்னாரின் பிறந்த ஊரான கட்டுவன், மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாசாலைமண்டபத்தில் மிகச் சிறப்பான முறையில்

... தந்த ஸ்தாபனங்கள் இன்றும் நம்மிடையே உள்ளன எனவே அவற்றின் வளர்ச்சிக்காகப் பாடுபடுவோம், எந்தப்பதவிக்காயும் ஆசைப்படாது பொது உதவி செய்வதையே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த அந்த உத்தமரை நினைந்து அஞ்சலி செய்வோமாக.

## பரிசு பெற்றனர்

உடுப்பிட்டி, வியாழன்

தென்கருணையம்பதி இந்து வாலிபர் சங்கம் நடாத்திய அகில இலங்கைக் கட்டுரைப் போட்டியில் முதல் பரிசான தங்கப் பதக்கத்தை திரு. க. மனோகரனும், இரண்டாவது பரிசை செல்வி த. புஷ்பராணியும், மூன்றுவது பரிசை திரு. ஆர். ஐயாக்கண்ணுவும் பெற்றனர். செல்வன்கள் கே சண்முகநாதன், கே. பத்மநாதன் ஆகியோர் பாராட்டைப் பெற்றுள்ளனர்.

இதர போட்டி முடிவுகள் வருமாறு திருமுறை ஓதுதல் (பெண்கள்) கீழ்ப்பிரிவு: செல்வி செ. தனலட்சுமி, மத்திய பிரிவு செல்வி சி கிரு...

இன்றைய...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளார்களென்பதையும் அமைச்சரினதும் நீதிபதியினதும் கருத்துக்கள் தெளிவுபடுத்துகின்றன.

இளைஞர்கள் இந்த அவல நிலைக்கு வருவதற்கான அடிப்படைக் காரணமென்னவென்பதை ஆராயவேண்டும். இன்றைய நிலைக்கு முக்கிய காரணமாக அமைகிறது.

இளைஞர்களின் இன்றைய நிலையை அரசாங்கமும் அரசியல், சமய, சமூக ஸ்தாபனங்களும் முக்கிய பிரச்னையாகக் கருதி கலந்தாலோசித்து ஒருவழிகாண முன்வரவேண்டியது மிக மிக அவசியமும் அவசரமுமாகும்.

## தமிழக முதல்வரின் முன்மாதிரி

அரசியல் தலைவர்களுக்கிடையே வேற்றுமைகள் என்ன இருப்பினும் சரி. மக்கள் நட்புடன் ஒற்றுமையாக வாழ்வதற்கான சூழ்நிலையை அவர்கள் ஏற்படுத்த வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு கருணாநிதி முன்னாள் முதலமைச்சரான திரு- பக்தவத்சலத்தின் 74-வது பிறந்த தினத்தன்று நடந்த வைபவத்தில் கலந்துபேசுகையில் சரியாகக் குறிப்பிட்டார். இவ்விஷயத்தில் அரசியலிலே மூத்த தலைவர்களுக்கு முக்கிய பங்குண்டு என்றும் அவர் சொன்னார்'

பேச்சுடன் நிற்காமல் தி. மு. க. தலைவரான அவர். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு பக்தவத்சலத்தின் பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டு அவரை வாழ்த்தியுள்ளார்' இது பாராட்டத்தக்க முன்மாதிரியாகும்.

இதேபோல் இங்கு தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகத்தின் பிறந்தநாள் விழாவில் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி ஜி. பொன்னம்பலம் கலந்துகொண்டு வாழ்த்தினால், திரு. ஜி. ஜி. யின் பிறந்த நாளில் திரு எஸ். ஜே. வி. கலந்து வாழ்த்தினால் தமிழ்ப் பொது மக்களுக்கு அது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும், திரு. டட்லி சேனநாயகாவின் பிறந்தநாள் விழாவில் பிரதமர் ஸ்ரீமா கலந்து வாழ்த்தவும், திருமதி ஸ்ரீமாவின் விழாவில் திரு டட்லி வந்திருந்து வாழ்த்தவும் முடியுமாயின் அதனால் சிங்கள பொதுமக்களிடையே எவ்வளவு நல்லெண்ணம் ஏற்படமுடியும்!

தலைவர்களிடையே அரசியல் கருத்துவேற்றுமை இருக்கலாம் அதனால் அவர்கள் விரோதிகளாகத் தேவையில்லை. பொது மக்களின் நன்மையே பல தலைவர்களின்பொது நோக்கமாயின் அவர்கள் தனிப்பட்ட முறையில் விரோதம் காட்டத் தேவையில்லை. தலைவர்கள் ஒருவருக்கொருவர் வசைமாரி பொழிந்தால் அவர்களைப் பின்பற்றும் மக்கள் எப்படி நட்பும் ஒற்றுமையும் கொண்டு வாழ்வார்கள்? ஒற்றுமையும் நல்லெண்ணமும் இல்லாவிடில் சமூகம் எப்படி வாழவும் முன்னேறவும் முடியும்.

தமிழக முதலமைச்சர் காட்டியுள்ள மேலான முன்மாதிரியைப் பின்பற்றி இங்குள்ள அரசியல் பெரிய தலைவர்களும் சிறப்பாகத் தமிழ் சமூகத் தலைவர்களும் தங்களுக்குள் நல் லுறவும் நல்லெண்ணமும்கொள்ள முடியாதா? தேர்தல் போராட்ட காலத்தில் போட்டிகள் தீவிரமாக இருப்பினும் தேர்தல் முடிந்தபின் பல கட்சித் தலைவர்களும் விரோதங்களை மறந்து நல்லுறவு கொள்வதாயின், அது மக்களுக்குப் பலவிதங்களிலும் நன்மை பயக்கும். இச்சமயம் சிறப்பாக தமிழ் மக்களிடையே ஒற்றுமையும் நல்லெண்ணமும் மிக அவசியமாகும் அது கைகூடுவது தலைவர்கள் கையில்தான் பெரிதும் உள்ளது. அவர்கள் பெரிய மனது காட்டுவார்களா?

## இறுதி ஆட்டத்தில் இரு கழகங்கள்

உடுப்பிட்டி, வியா, கரவெட்டி சுடரொளி விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடாத்தப்பட்ட கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி மோதலில் கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகமும் ஊர்காவற்றுறை விளையாட்டுக்கழகமும் ஈடுபடவிருக்கின்றன.

இதனையடுத்து இராணுவ விளையாட்டுக் கோஷ்டியும் மன்னார்கோஷ்டியும் 'செற்-அப்' விளையாட்டில் பங்கு பற்றும்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

...வது ஆண்டு நினைவு விழா அன்னாரின் பிறந்த ஊரானகட்டுவன், மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாசாலைமண்டபத்தில் மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்பட இருக்கின்றது.



உலகில் எத்தனையோபேர் பிறக்கிறார்கள். அதேபோல இறந்தும் விடுகிறார்கள். ஆனால் அனைவரின் உள்ளங்களிலும் நீங்காத இடத்தைப் பெறுபவர்கள் மிகச் சிலரே. இந்த வரிசையில் தனக்கென வாழாது பிறர்க்குரியாளனாய், தொண்டே மூச்சாகப் பொதுப்பணி புரிந்த பெரியார் திரு. கந்தவனம் பொன்னம்பலமவர்கள் ஆவார்.

தன் வாழ்நாளில்பெரும் பகுதியை பொதுப் பணிக்காக அர்ப்பணித்து வாழ்ந்த அவரின் உயர்பணிக்கு இன்றும் உயர்ந்தோங்கி நிற்கும் பொதுஸ்தாபனங்கள் பலவும் சான்று கூறிக்கொண்டிருக்கின்றன.

மயிலிட்டி கிராமசபை அங்கத்தவராகி அவர் மேலும் பல சேவைகளைச் செய்தார். தமது ஊரளவில் மட்டும் நில்லாமல் தெல்லிப்பழை ஐக்கியவைத்தியசாலைச் சங்கம், தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆகியவற்றின் நீண்டகால அங்கத்தவராகி அயற்கிராமங்களுக்கும் யாழ்ப்பாணம் ஐக்கிய மேற்பார்வைச் சபை, மலையாளப் புகையிலைச் சங்கம் முதலியவற்றிற் பங்குற்று நம்நாட்டிற்கும் அருந்தொண்டாற்றினார்.

கூட்டுறவு இயக்கம் பற்றிய தெளிவான அறிவும் அனுபவமும் கொண்ட இவர் கூட்டுறவுத் துறையில் ஆற்றிய பணிகளே பலவாகும். கூட்டுறவு இயக்க முக்கிய பிரமுகர்களில் ஒருவராக விளங்கிய இவர் வேறு பல தொழில்கள் செய்யும் ஆற்றல் உள்ளவராயிருந்த போதும், கூட்டுறவு இயக்கத்தின் மேற் கொண்ட அபார பற்றுதலால் வேற்றுத் தொழில் விடுத்து யாழ்ப்பாணம்கூட்டுறவு மாகாண வங்கியில் சிறுப்பாகக் கடமையாற்றினார் கூட்டுறவுப் பகுதியில் எங்கெங்கு ஊழல்கள் மலிகின்றனவோ அங்கெல்லாம் இவரின் குரல் ஒலித்து ஊழல்கள் அம்பலப் படுத்தப்பட்டுவந்தன; இயக்கமும் வலுவுடன் வளர்ந்தது.

சமூகத் தொண்டினால் உயர்ந்து நின்ற பெரியார் அவர்கள் ஆத்மீகத்துறையில் பெரிதும் ஈடுபாடு கொண்டுழைத்து வந்தவர். இருஷிகேசத்து சிவானந்த சரஸ்வதியவர்களை நேரிற் சந்தித்து அவரின் அருள் பெற்ற சீடராகி சமயப் பணிபுரிந்தவர். சுவாமிசிவானந்தரின் பகவான்ஞான விருந்து' என்ற நூலை ஆங்கில மொழி மூலத்திலிருந்து தமிழில் ஆக்கிப் பதிப்பித்து வெளியிட்டவர். கட்டுவன் தண்ணித் தாழ்வு ஆலய திருப்பணியில் தூணாகநின்று உழைத்து வைரவப் பெருமானின் திவ்ய அருள்பெற்ற அமரர் திரு. க பொன்னம்பலமவர்கள் இந்தியா, இலங்கை, மலேயா ஆகிய நாடுகளில் உள்ள ஆலயங்கள் பலவற்றிற்கும் தலயாத்திரை மேற்கொண்டுதெய்வீக தரிசனம் பெற்றவரார்.

எந்தக் காரியத்தையும் தன்னாலியற்றமுடியும் என்ற தன்னம்பிக்கையும் திடசித்தமும் தூய உள்ளமும் கொண்ட தொண்டரவர்கள் இவ்வுலகை விட்டு மறைந்து ஐந்து ஆண்டுகள் சென்று விட்டாலும் அவரின் பணிகள் அவராக்கிப்படாது பொது உதவி செய்வதையே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த அந்தத் தமரை நினைந்து அஞ்சலி செய்வோமாக.

- ஆ. சச்சிதானந்தன் -

## ஊருக்கென்றுழைத்த செம்மல்

பேருக்கென் றுழைத்தி டாது
பிறங்குநல் லார்வத் தாலே
ஊருக்கென் றுழைத்த செம்மல்
உயர் பொன்னம் பலமே வாழ்க
நேர்மைக்கும் நியாயத் துக்கும்
நிகரிலாச் சேவை யாற்றி
ஊர்மக்கள் உள்ளம் ஆளும்
உத்தம வாழ்க வாழ்க!

வி. கந்தவனம்

## இன்றைய பலன்

புரட்டாதிமாதம்30-ம்திகதி (16-10-70)

மேஷம்- ஆணவப்போக்கினால் நண்பர்களைப் பகைத்துக் கொள்ளுவீர்கள் மற்றவர்களின்குறுக்குவழித் தலையீடு ஆத்திரத்தைமூட்டலாம்.

ரிஷபம்- நீண்ட நாள் எதிர்பார்த்த நல்ல செய்தி இன்றுகிடைக்கலாம் இன்று சிறப்பான தினம்.

மிதுனம்- தூக்கம் விழிகளைத் தழுவமறுக்கும். கடந்தகால எண்ணங்கள் அலைமோதும். அடக்கம் வேண்டும்.

கடகம்- மதிநுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள். பயன் தரும் பிரயாணமொன்றும் மேற்கொள்ளப்ப லாம்.

சிம்மம் மனதுக்கு நிம்மதி தரும் சம்பவங்கள் இடம் பெறும். பூமிப் பிணக்கில் ஒரு சமரச உடன்படிக்கை ஏற்படலாம். பொன்னான தினம்.

கன்னி எதிர்பாராத வகையில் பொருள்விரயமாகும் வியாபாரத்துறையில் பிணக்குகள் தோன்றி மறையும். தெய்வநம்பிக்கை நன்று.

துலாம்- பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். குடும்ப பிணக்கில் சுமுகமான நிலை தென்படும்.

விருட்சிகம்- அரசபயத்திற்கு இடமுண்டு, மின்னியல் பொறியியல் பகுதிகளில் கடமையாற்றுபவர்கள் மிகவும் கவனம் செலுத்தவும்.

தனுசு- தெய்வநம்பிக்கை மேலோங்கி நிற்கும். சிலருக்கு ஆன்மீக விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம்

மகரம்- துணிச்சலுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள் சிலருக்குப் பொது சனத் தலைமையும் கிடைக்கலாம்.

கும்பம்- பொதுப்பணிகளில் ஈடுபடவிரும்புவீர்கள் குறிப்பாக அரசியல்வாதிகளுக்குப் புதிய ஆர்வம் பிறக்கலாம்.

மீனம்- வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும். சுற்றாடலின் உற்சாகமான வரவேற்புக் கிடைக்கும். அதிக வருவாய்க்கு இடமுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

...நாதன், கே. பத்மநாதன் ஆகியோர் பாராட்டைப் பெற்றுள்ளனர்.

இதர போட்டி முடிவுகள் வருமாறு திருமுறை ஓதுதல் (பெண்கள்) கீழ்ப்பிரிவு: செல்வி செ. தனலட்சுமி, மத்திய பிரிவு செல்வி சி கிருஷ்ணவேணி, மேற்பிரிவு செல்வி செ. யோகேஸ்வரி (ஆண்கள்) சி. குணராசா.

பேச்சுப் போட்டி கீழ்ப்பிரிவு செல்வி சி பவளமலர், செல்வன் வே பேரானந்தன் செல்வி செ யோகேஸ்வரி (மத்திய பிரிவு) த. வசந்தகுமார்.

## 'திருமுறைகளின் மகத்துவம்''

தாவடி, வியாழன்

''சைவசமயத்தின் தூண்களாக விளங்குவன திருமுறைகள் ஆகும் வேதத்தின் உட்பொருளைக் கொண்ட தமிழ் வேதமுமாகும். அப்பேற்பட்ட சிறப்புவாய்ந்த திருமுறையை நாம் போற்றுதல் வேண்டும். ஒவ்வொரு இல்லங்களிலும் சைவசமயத்தவர்கள் யாவராலும் ஒத்தப்பட்டு வருதல் சைவசமயத்தின்மகிமையை உயர்த்தும் அத்துடன் சமய வளர்ச்சிக்கும் பெரிதும் உதவுவதுடன் ஆத்ம ஈடேற்றத்துக்கும் பெருந்துணை புரியும்''

இவ்வாறு தாவடி வடக்கு குழந்தைசிட்டி கணையன் வளவு ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய 41-வது கும்பாபிஷேக தினத்தன்று சொற்பொழிவாற்றிய பண்டித வித்துவான் திரு. சி. ஆறுமுகம் ஆசிரியர் கூறினார். ...

## ஆராதனைகள் இல்லை

உடுப்பிட்டி, வியாழன்

கரவெட்டி மீசாலைச் சேர்ந்த கட்டளைக் குரவர் வண. பிதா எஸ். சிங்கராயர் சுகவீனம் காரணமாகக் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருவதனால் கரவெட்டியிலுள்ள தேவாலயங்களில் ஆராதனைகள் தடைப்பட்டுள்ளன

## ரோம் சென்றார்

பண்டத்தரிப்பு. வியாழன்

இலங்கையின் மிகப் பிரசித்தி பெற்ற ஞான வொடுக்க போதகர்களில் ஒருவரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் கத்தோலிக்க நிகழ்ச்சித் தயாரிப்பாளருமான வணபிதா எம். ஜே. அல்பிரட் உயர் கல்வி பெறும் பொருட்டு ரோம் சென்றுள்ளார்.

தவிர வேறு எந்தத் தலைவரிடமும் மன்னார் படடின சபை ஆரம்பித்த காலத்திலிருந்து இன்றுவரை கேட்கப்பட்டதில்லை. இப் பட்டின சபையையும் மக்களையும் ஒழுங்காக நடத்திக் கொள்ள முடியாத தலைவர் எப்படிப் பாராளுமன்றம் போய் மன்னார் மாவட்ட மக்களுக்காகப் பாடுபடுவார்? மக்களுக்காகத் தன்உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்பவரே பாராளுமன்றத்துக்குத் தகுந்தவரே தவிர மக்களிடம் சுரண்டித் தின்னும் பேர்வழி அல்ல. சுய நலவாதி பொதுநல விரோதி' சுல்தான் தொடர்ந்து கூறியதாவது:

தாராக்குண்டில் பிறந்த காலம் முதல் இருக்கிறேன் பதில் கிராம விதானையாராகவும் கடமையாற்றியிருக்கிறேன். தாராக்குண்டில் இரண்டு பள்ளிவாசல்களுண்டு. ஒன்று ஹசேனியா பள்ளிவாசல் மற்றது மீரான் பள்ளிவாசல். இரு பள்ளிவாசல்களிலும் தொழுகை நடைபெற்று வந்தது. ஒவ்வொருநாளும் ஐந்துதடவை தொழுகை நடக்கும். வெள்ளிக்கிழமையிலும்தொழுகை நடைபெறுவதுண்டு. கடந்த பொதுத்தேர்தல் நினைவிருக்கிறது எதிர்மனுதார் அழகக்கோனை எனக்குத் தெரியும். கனகாலமாக எம் பி. யாக இருந்தவர். அவருடன் நான் கதைத்திருக்கிறேன். மே 15-ந் திகதி கடைக்கு அருகில் அவரைக் காரில் சந்தித்திருக்கிறேன் எங்கிருந்து வருவதாககேட்டேன் பள்ளிவாசலில் ஆட்களுககுச்சொல்ல வந்தேனென்று கூறினார். கடைக்குக்கிட்ட ஹசேனியா பள்ளிவாசலிருக்கிறது. அந்தக் கடையை அஹமது நயினா கடையென அழைப்போம். அவரிடம்; ''தொழுகை இந்தப் பள்ளியிலில்லை மற்றப்பள்ளியில் என்றேன். மீரான் பள்ளிவாசலைத்தான் அவரிடம் சொன்னேன். அவர் ஒரு நோட்டீஸ் தந்தார். தேர்தலைப்பற்றிய நோட்டீஸ் அது. அந்த நோட்டீசைப்படித்தேன். அதிலுள்ளதை என்னவென்று அறிந்துகொண்டேன். அங்கிருந்து வீட்டுக்கு போய் சாறத்தை மாற்றிக்கொண்டு, மீரான் பள்ளிக்குப் போனேன். பள்ளிக்குச் சுத்தமாகப் போகவேண்டும் அதுதான் வழக்கம். அதனால்தான் சாறம் மாற்றப் போனேன். பள்ளிக்குப் போகுமுன் அழகக்கோன் காரில் உள்ளிருப்பதைக் கண்டேன். தேநீர்க் கடையில் நின்ற அதே காரிஸ்தான் சாரதியும் மற்றொருவரும் எனக்கு அவ சம்சுதீன் இருந்தார், மௌலவி கதீஸ் பிரசங்கம் செய்வார்கள்,

கடந்த மே 15-ம் திகதி கதீஸ் பிரசங்கம் நடந்து கொண்டிருந்தது. அன்று மஜீத் மௌலவி பிரசங்கம் செய்தார். அப்போது அழகக்கோன் அங்கு வந்தார், சிலர் எழும்பி நின்றார்கள், கதீஸ் பிரசங்கம் நிறுத்தப்பட்டது. நான் நின்ற கதவுக்கு 2 அடி தூரத்தில் உள்ள விறுந்தையில் அழகக்கோன் நின்றார். அழகக்கோன் போன பின்னர் கதீஸ் பிரசங்கம் தொடர்ந்து நடந்தது.

இன்று காலை 9 மணிக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறும்,

......

## கதம்ப விழா

வல்வெட்டித்துறை, வியா.

பருத்தித்துறை தும்பளை சைவப்பிரகாச வித்தியாசாலையில் இம்மாதம் 21-ந் திகதி கதம்பவிழா ஒன்று நடைபெற விருக்கிறது. பிரதம விருந்தினராக உதவிக் கல்வி அமைச்சர் திரு பி. வை துடாவை கலந்து கொள்வாரெனத் தெரிகிறது.

## இடமாற்றம்

ஊரதீவு, வியா

புங்குடுதீவு அமெரிக்கன் மிஷன் வித்தியாசாலை ஆசிரியரான திரு. சு. யேபூராசா புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி வித்தியாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## ஆசிரியசங்க நிர்வாகிகள்

உடும்பராய், வியா

12-10-70 திங்கட்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வலி-கிழக்குத் தமிழாசிரியர் சங்கத்தின் 27வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர்: திரு க இ குமாரசாமி. காரியதரிசி: திரு அ பஞ்சாட்சரம், தனதிகாரி: திரு த மயில்வாகனம், உபதலைவர்கள்: க மார்க்கண்டு சி சிவசம்பு, பொ வேலும் மயிலும், உபகாரியதரிசி: திரு ம க நடராசா.

10 பேர் கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org